CASH FOR GOLD
R-GOLD®
Mob: 93457 93457

# தி கோவை ஹெரால்டு
# THE KOVAI HERALD

CASH FOR GOLD
R-GOLD®
Mob: 93457 93457

RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2024-26 | Kovai / Tirupur | thekovaiherald.co.in | facebook.com/Thekovaiherald
Volume 8 | Issue 33 | English & Tamil Weekly | 11.1.2026 - 17-1-2026 | 8 Pages | Price Rs.3/-

உலகின் முதல்தரமான
காஞ்சிபுரப்பட்டு புடவை தயாரிப்பாளர்கள்
மற்றும் ஏற்றுமதியாளர்கள்




ஸ்ரீ தேவி®
டெக்ஸ்டைல்

கிராஸ்கட் ரோடு, காந்திபுரம், கோயம்புத்தூர் | ✆ : 0422-4230000 | Shop Online at www.shreedevitextile.com

## Israel India Global Innovators Hackathon Kicks Off at SREC



THE KOVAI HERALD

Sri Ramakrishna Engineering College (SREC), under the Sri Ramakrishna Institutions of SNR Sons Charitable Trust, inaugurated the 36-hour Israel India Global Innovators Hackathon 2026, conducted in collaboration with Ariel University, Israel, and Promitei Ltd., Israel.

The two days hackathon has drawn strong participation from student innovators across the country. A total of more than 540 teams comprising over 1,400 students registered for the event.

The event was formally inaugurated and was presided over by Dr. Sundar Ramakrishnan, Managing Trustee, SNR Sons Charitable Trust, along with S. Narendran, Joint Managing Trustee, and V. Ramakrishna, Trustee. The hackathon is convened by Dr. A. Soundarrajan, Principal, SREC.

An eminent international panel of experts from India, Israel, and Singapore addressed the participants, including Rami Itselev and Dave Belostotsky from ERA-ITA, Israel; Mark Melamed of Promitei Ltd., Israel; Shankar Mohan, CEO, Biopharmax Group Ltd., India; Dr. Paramjeet Singh Makani, Director, Pantomath Financial Services Group; Oorvahsk F. Dastoor, Managing Director, Nest Egg Asset Management; Dr. Arpit Deepak Yadav, Senior AI Scientist& Researcher, CCE; and Dr. Salur Srikant Patnaik, Dean, IFIM Institutions. A special address was delivered by Albert Pinhasov, Rector, Ariel University, Israel and Lemeul Melamed of Promitei Ltd., Israel.

## Coimbatore Cultural Academy Hosts 'Goddess Devi Abineya Natiya'




THE KOVAI HERALD

The Coimbatore Cultural Academy presented an evening of classical dance titled Goddess Devi Abineya Natiya at the auditorium of Vivekalaya's Vichara World School, enchanting the audience with its artistic finesse and devotional themes.

The programme showcased performances by Shatabdi Nrityayan, Kolkata, under the direction of acclaimed Odissi artiste Shatabdi Mallik, a leading figure among the younger generation of Odissi dancers. A senior disciple from the lineage of the Late Padmashree Guru Sri Deba Prasad Das Gharana and trained under Guru Kelucharan Mohapatra Yuva Pratibha Samman awardee Gurushree Debaprasad Das, Mallik has earned recognition both in India and abroad. She is empanelled with the Indian Council for Cultural Relations (ICCR), Ministry of External Affairs, Ministry of Culture, and Festivals of India, is an A-Grade artist of Doordarshan, and a recipient of both Junior and Senior National Scholarships along with the Junior Research Fellowship for Odissi under the Ministry of Culture. Adding charm and depth to the event were performances by her disciples—Tanmay Samaddar, Debasmita Kar, Farjana Yasmin, Bithika Mishra, and Sampriti Paul—who impressed with their precision, expression, and thematic interpretation.

Col. CST Swamy, the chief guest, praised the artistes for their dedication to classical arts and appreciated the efforts of the Coimbatore Cultural Academy in promoting cultural and musical excellence. M.N. Padmanabhan, Managing Partner Lakshaka Tex LLP, applauded the Academy's sustained efforts in nurturing musicians and dancers, noting that events such as this and last year's performance by a Russian troupe would encourage artistes to return to Coimbatore for future engagements. M.N.Padmanabhan, Ramesh T, Shanthni.V, Dr. A. Umashree, N. Parsram, and Aishwarya Rao of Vivekalaya School and Dharanendra Momaya graced the occasion. The evening concluded to warm applause, marking another successful contribution to Coimbatore's growing classical arts scene.

## KMCH gains international recognition for their research work on cancer



THE KOVAI HERALD

KMCH Research Foundation, the research wing of Kovai Medical Center & Hospital has brought international recognition to India by securing the best poster award at the European Society for Medical Oncology (ESMO) Asia Congress 2025, held at Singapore.

Srinidhi Narayani Seenivasan, Ph.D. Research Scholar presented her work at ESMO Asia Congress. The Research team comprised of basic scientists Dr.G.Velmurugan and clinical team from Comprehensive Cancer Centre, Kovai Medical Centre & Hospital including Dr Firoz Rajan and Dr. Ezhir Selvan Chidambarasamy, Surgical Oncologists and Pathology team led by Dr. Sangeetha Mehta along with scientists Dr.S. Mohanraj and Dr Arulraj Ramakrishnan at KMCH Research Foundation. This study was funded by Anusandhan National Research Foundation [formerly Science and Engineering Research Board], Government of India. Dr. Nalla G. Palaniswami, Chairman and Founding Trustee expressed happiness on the recognition

## New office bearers take charge in Indian Medical Association Coimbatore Chapter

THE KOVAI HERALD

102nd annual assumption of office ceremony of the Indian Medical Association Coimbatore Chapter, held at the association's meeting hall in Coimbatore.

At the ceremony, Dr. Goshalram assumed charge as the 102nd President of the IMA Coimbatore Chapter. Dr. Parameswaran took charge as Secretary and Dr. Balamurugan as Finance Secretary for the year 2026.



The function was graced by Dr. Sridhar, President of the Tamil Nadu State Branch of the Indian Medical Association, as the chief guest. Dr. Jayalal, President of the Commonwealth Medical Association, and Dr. Abul Hassan, President of the Hospital Board of India, participated as special guests. Also present on the occasion were Dr. A.K.Ravikumar, elected Tamil Nadu State President of the Indian Medical Association for 2026, Dr. N.R.T. R. Thyagarajan, State President for 2027, Dr. Thiraviyan Mohan, State Honorary Secretary, Dr. Solomon Jaya, State Finance Secretary, and former State Secretary Dr. Karthik Prabhu, who extended their greetings to the new office-bearers.

## How the Spiritual Process Lost its "Quality Control"



THE KOVAI HERALD

**Q:** Sadhguru, you said that there used to be quality control in spirituality earlier but a thousand years of foreign subjugation has destroyed those checks and balances. Would you elaborate on this please?

**Sadhguru:** The checks and balances came from within. There was no external authority to check whether a spiritual process was genuine or not, whether it is used in the right direction or not. It was self-governed. It could be self-governed simply because the spiritual process was not an isolated aspect. The spiritual path was not followed by just a fringe group of people. Spirituality was mainstream. This has never happened in any other part of the world. Religion has happened, but an active spiritual process for a large segment of society has never happened anywhere else.

In the same town, there would be many gurus, each speaking different things but none of them in conflict with anyone else. This naturally led to a very democratic process of doing things because it was widespread. And people had the option to sit in one place one day, another place the next day, and still another the day after. Gurus were not insecure. They wouldn't prevent anyone from going anywhere. They said, "If you don't think this is the best place, don't be here. Go where you want." I am saying that even today. The only problem today is there may not be enough places for you to explore. But in the past, when this kind of ecosystem was present, there naturally were checks and balances because there were so many people in society who were in profound states of experience. If somebody said something wrong, everyone immediately knew this is not it.

### A Qualified Audience

For example, let's say you learn Indian classical music. You can go and sing in Atlanta, they will clap their hands. You can sing in Delhi or Mumbai, they will clap their hands. But when you go to Chennai and sing, if you make one little mistake, they will get up and leave because the audience is so qualified and steeped in music.

Chennai is the only place where in December and January, for an entire sixty days, there will be five concerts every day taking place in a hundred different venues. People go from concert to concert, concert to concert. Such a culture is not present anywhere else on the planet. This could be a huge event that attracts audiences from around the globe, but they will not promote or advertise it because they are such purists. They say, "If you have a sensitive nose, you will come for the fragrance. If you don't have such a sense, we don't want you to come!" Similarly with the spiritual process, there was a qualified audience. But when invasions happened, the most qualified people were the first ones to get killed because invaders not only want land, gold and women. They understand clearly that unless they impose their religion upon you, you are not fully taken. So, the first thing they did was destruction of the spiritual process.

This happened primarily in the northern plains of India, where many masters had to move into the Tibetan plateau for survival. This led to a huge dislocation and so today, many people who should have been astrologers, priests and even conmen are claiming to be Gurus. Because there aren't enough realized beings, a lot of entrepreneurs have come up. Some of them have good intentions, but good intention armed with ignorance is potentially dangerous more dangerous than evil if you ask me because good intentions give legitimacy to ignorance. Many ignorant people are nice. You can marry them if you want but you don't choose them as your Guru because they will take you down the drain.

### Making Truth Mainstream

If we want to bring quality control back, the first thing we have to do is make spiritual process mainstream, where there are millions of people who are practicing, who know by experience and can make a distinction between what is real and what is not real, between what will lead to their liberation and what will entangle them. If there is a qualified audience, then a cleanup will naturally happen.

Truth should become mainstream. Right now, lies have become mainstream, truth is fringe. Initially, people lie with some hesitation. As days progress, they start lying with more confidence. After some time, everybody knows everybody is lying but because it is mainstream, it is okay.

If truth is mainstream, if somebody utters one little lie, everyone will see it and it will get obliterated by itself. I am hoping everyone, especially the young people, stand up and make truth mainstream.

## Camford International School Organises Bird Conservation Awareness Marathon

THE KOVAI HERALD



To promote bird conservation, environmental awareness, physical fitness, and social participation, Camford International School in Coimbatore organised a mini-marathon titled "Camford Wingathon" in connection with National Bird Day.

The event was held under the guidance of Chairman Arul Ramesh, Correspondent Poongothai Arul Ramesh, and Principal Poonam Syal.

The marathon was flagged off by Dr. P. Pramod, Senior Principal Scientist, Nature Education Division, SACON (Salim Ali Centre for Ornithology and Natural History). At the prize distribution ceremony, Manickaraj, Assistant Commissioner, Income Tax Department, Coimbatore, presented trophies and medals to the winners.

## Special Pongal Train Services Between Pollachi and Chennai

In view of the upcoming Pongal festival, the Railway Department has announced special train services between Pollachi and Chennai.

According to a press release issued by the Salem Railway Division, a special PollachiChennai Express (Train No. 06194) will depart from Pollachi on January 8 at 11.30 p.m. and arrive at Chennai Central at 9.50 a.m. the following day.

In the return direction, the Chennai CentralPollachi Special (Train No. 06193) will leave Chennai Central on January 9 at 11.50 p.m. and reach Pollachi at 9.05 a.m. the next morning.

The special train will halt at Tiruppur, Erode, Salem, Jolarpet, Katpadi, Arakkonam, Tiruvallur and Perambur stations en route, the release added.

FOR NEWS Publication
9244317182
04223147962

# பிப்ரவரி 22ல் ஜெம் அறக்கட்டளையின் கோவை மகளிர் மாரத்தான் 3வது பதிப்பு

திி கோவை ஹெரால்டு




ஜெம் அறக்கட்டளை சார்பில் நடத்தப்படும் கோயம்புத்தூர் மகளிர் மாரத்தான் போட்டியின் மூன்றாவது பதிப்பு வரும் பிப்ரவரி22ஆம்தேதிகாலை 5.30மணிக்குஜெம்மருத்துவ மனைவளாகத்தில்இருந்து துவங்குகிறது. தமிழ்நாடு தடகள சங்க அங்கீகாரம் பெற்ற இந்த நிகழ்வு, புற்று நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இலவச சிகிச்சைவழங்கநிதிதிரட்டும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது. போட்டிக்கான டி-ஷர்ட் மற்றும் லோகோ அறிமுக விழா கோவை காவல் ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்வை கோவை காவல் ஆணையாளர் என்.கண்ணன் வெளியிட்டார். ஜெம் மருத்துவமனை தலைவர் டாக்டர்சி.பழனிவேலுமற்றும் செயல் அதிகாரி டாக்டர் பி. பிரவீன்ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கடந்த25ஆண்டுகளாக ஜெம் அறக்கட்டளை மருத்துவ முகாம்கள், அறுவை சிகிச்சைகள், புற்றுநோய் விழிப்புணர்வு,கல்விஉதவித் தொகைகள்போன்றவற்றின் மூலம் பல்வேறு சமூக சேவைகளில்ஈடுபட்டுவருகிறது. ரோட்டரிகிளப்மற்றும் மெட்ரோபோலிஸ்அமைப்புகளின் ஒத்துழைப்பில் 100-க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு ரூ.3 கோடி மதிப்பிலான அறுவைசிகிச்சைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு போட்டி 3 கி.மீ., 5 கி.மீ., 10 கி.மீ., மற்றும் 21 கி.மீ. என நான்கு பிரிவுகளாக நடத்தப்பட உள்ளது. இதற்காக ஏற்கெனவே 1,000க்கும் மேற்பட்ட பெண்கள் பதிவு செய்துள்ள நிலையில், மொத்தமாக 10,000க்கும் மேற்பட்டபங்கேற்பாளர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

போட்டிக்கான வழித்தடங்களில் புலியகுளம் கார்மல் கார்டன் நிர்மலா கல்லூரி (3 கி.மீ.), ரேஸ் கோர்ஸ் (5 கி.மீ.) மற்றும் திருச்சி ரோடு வெங்கடலட்சுமி கல்யாண மண்டபம் (10 கி.மீ.) ஆகியவை அடங்கும். போட்டியில் பங்கேற்கும் வீராங்கனைகள் பாதுகாப்பாகபங்கேற்ககாவல்துறையும் ஏற்பாட்டாளர்களும் அனைத்து முன்னெச்சரிக்கை களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

பெண்களின் பாதுகாப்பு, சுய மேம்பாடு மற்றும் பாதுகாப்பான நகரை உருவாக்கும் நோக்கத்துடன் இந்நிகழ்வு நடத்தப்படுவதாக அறக்கட்டளை தெரிவித்துள்ளது. போட்டிகாலை5.30மணிக்கு தொடங்கும் நிலையில், பங்கேற்பாளர்கள், பார்வையாளர்கள் மற்றும் ஊடகப் பிரதிநிதிகள் அனைவரும் ஒரு மணி நேரத்திற்கு முன்பாக ஜெம் மருத்துவமனை வளாகத்தை அடைய வேண்டுமென கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

பதிவு மற்றும் மேலதிக விவரங்களுக்கு 8925847519 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம். மேலும் www.coimbatorewomensmarathon.com தளத்தில் ஆன்லைன் பதிவு செய்யலாம்.

# ஸ்டீல், காப்பர் மூலப்பொருட்கள் விலை உயர்வை கண்டித்து விரைவில் போராட்டம்

## கோவை தொழில்துறையினர் தகவல்

ஸ்டீல்,காப்பர்உள்ளிட்ட மூலப் பொருட்கள் விலை உயர்வைகுறைக்கமத்திய அரசுவிரைவில்நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையெனில் போராட்டம் நடத்தப்படும் என, தொழில்துறையினர் தெரிவித்தனர்.

உற்பத்தி பிரிவின் கீழ் செயல்படும் அனைத்து தொழில் நிறுவனங்களுக்கும் ஸ்டீல், காப்பர் போன்ற பொருட்கள் முக்கிய மூலப் பொருட்களாக உள்ளன. இத்தகைய மூலப் பொருட்களின் விலை சமீப காலமாக தொடர்ந்து உயர்த்தப்பட்டுவருவதால் குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையினர் மத்தியில் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து 'டேக்ட்' தொழில் அமைப்பின் மாவட்ட தலைவர் ஜேம்ஸ், 'காட்மா' தொழில் அமைப்பின் தலைவர் சிவக்குமார், மற்றும் ரயில்வே உதிரி பாகங்கள் விநியோகிப்போர் சங்கத்தின் தலைவர் சுருளிவேல் ஆகியோர் கூறியதாவது:

சமீபகாலமாக தொடர்ந்து காப்பர், ஸ்டீல், அலுமினியம் உள்ளிட்ட பல்வேறு மூலப்பொருட்கள் விலை அடிக்கடி உயர்த்தப்பட்டு வருவதால் நாடு முழுவதும் உள்ள குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் மிகுந்த நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

தங்கம் மற்றும் வெள்ளியின் விலையைப் போல அடிக்கடி விலை உயர்த்தப்படுவது உற்பத்தி பணிகளை மிகக் கடுமையாக பாதித்துள்ளது. இந்தியாவில் ஸ்டீல், காப்பர் போன்ற மூலப்பொருட்களை குறிப்பிட்ட சில தனியார் நிறுவனங்கள் மட்டுமே உற்பத்தி செய்கின்றன. இத்தகைய சில தனியார் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில், மத்திய அரசு மூலப் பொருட்களுக்கான இறக்குமதி வரியை மிக அதிகமாக உயர்த்தி உள்ளது. இதனால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய முடியாமல் வேறு வழி இன்றி உள்நாட்டில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படும் தனியார் நிறுவனங்களின் மூலப் பொருட்களை கட்டாயம் வாங்க வேண்டிய நிலைக்கு தொழில்துறையினர் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் சட்டப்பேரவை தேர்தல் நெருங்கிவரும் நிலையில், பிரதமர், மத்திய அமைச்சர்கள் உள்ளிட்ட பல்வேறு தேசிய கட்சிகளின் முக்கிய தலைவர்கள் தொடர்ந்து தமிழ்நாட்டுக்கு வருகை தர உள்ளனர். அவர்களிடம் மூலப் பொருட்களின் விலையை குறைப்பது தொடர்பான கோரிக்கையை வலியுறுத்த முடிவு செய்துள்ளோம்.

விரைவில் மூலப் பொருட்கள் விலையை குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் பல்வேறு தொழில் அமைப்பினர் ஒன்றுபட்டு கோவை மாவட்டத்தில் போராட்டத்தை முன்னெடுப்போம். ஏற்கனவே பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள தொழில்துறையினருக்கு மூலப் பொருட்கள் விலை உயர்வு கூடுதல் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது.

எதிர்வரும் நாட்களில் மூலப் பொருட்கள் விலை கட்டுப்பாட்டில் இருப்பதை உறுதிசெய்ய மத்திய அரசு கண்காணிப்பு கமிட்டி அமைக்க வேண்டும் அதேபோல் உள்நாட்டில் தொழில்துறையினருக்கு போதுமான அளவு அளவு மூலப்பொருட்கள் கிடைப்பதை உறுதிசெய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழில்துறையினர் நலனை கருத்தில் கொண்டு இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண வேண்டும்.

இவ்வாறு தொழில்துறையினர் தெரிவித்தனர்.

'ரத்தம் கொடுங்கள்; பலருக்கு மறுவாழ்வு கிடைக்கும்'

# புகையில்லா போகி: பொதுமக்கள் ஒத்துழைப்பை வேண்டிய மாவட்ட ஆட்சியர்



பொங்கல் திருநாளுக்கு முன்பாக கொண்டாடப்படும் போகி பண்டிகையைஇந்தஆண்டு "புகையில்லாபோகி"யாகக் கொண்டாடுமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

முன்னோர்கள், இயற்கைப்பொருட்களால் தயாரிக்கப்பட்ட பழைய பொருட்களை மட்டுமே தீயிட்டு எரித்து, "பழையது கழிதலும்புதியதுபுகுதலும்" என்றஎண்ணத்தோடுபோகி திருநாளைக் கொண்டாடி வந்தனர். அத்தகைய செயல்கள்சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாமல்இருந்தன.

ஆனால் தற்போதைய சூழலில், பழைய பிளாஸ்டிக், செயற்கை இழைகள், ரப்பர், டயர், ட்யூப், இரசாயனங்கள் கலந்த பொருட்கள் போன்றவற்றை எரிப்பதால் அதிக புகை உருவாகி காற்று மாசு ஏற்படுகிறது. அடர்ந்த புகை காரணமாக விமான போக்குவரத்திலும் தாமதம் ஏற்படுவதுடன், வாகன ஓட்டிகளுக்கும் சிரமம் மற்றும் விபத்து அபாயம் அதிகரிக்கிறது.

மேலும், இச்செயலால் நச்சுவாயுக்கள் வெளியேறி, மூச்சுத்திணறல் மற்றும் கண் எரிச்சல் போன்ற உடல்நலப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதைத் தடுக்கத் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் கடந்த 21 ஆண்டுகளாக விழிப்புணர்வு பிரச்சாரங்களைதொடர்ந்து நடத்தி வருகிறது. இதன் விளைவாக கடந்த சில ஆண்டுகளில் இத்தகைய நச்சுபொருட்களைஎரிக்கும் செயல்கள் கணிசமாக குறைந்துள்ளன.

2026-ஆம் ஆண்டிற்கும் இந்த விழிப்புணர்வு பிரச்சாரம் கோயம்புத்தூர் மாநகரம் மற்றும் மாநிலம் முழுவதும் நடத்தப்பட உள்ளது.

எனவே இவ்வருடமும் பொதுமக்கள் பிளாஸ்டிக், ரப்பர், டயர், ட்யூப் போன்ற பொருட்களை எரிப்பதைத் தவிர்த்து, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் போகி திருநாளைக் கொண்டாடுமாறு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஜனவரி 21 வரை 'இது நம்ம ஆட்டம் 2026'

## விளையாட்டுப் போட்டிகளுக்கான முன்பதிவு

தமிழக அரசு சார்பில் 'இது நம்ம ஆட்டம் 2026' என்ற பெயரில் மாநிலம் முழுவதும் இளைஞர் விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன. உடல், மன ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், விளையாட்டுத் திறனை வளர்க்கவும் ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும்மாநில அளவுகளில் போட்டிகள் ஜனவரி 22 முதல் பிப்ரவரி 8 வரை நடைபெறுகின்றன.

போட்டிகளில் 16 வயது முதல் 35 வயது வரை உள்ள இளைஞர்கள் பங்கேற்கலாம். மாநிலம் முழுவதும் உள்ள 388 ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்றிய அளவிலான போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஒன்றியத்திலும் முதலிடம் பெறும் வீரர், வீராங்கனைகள் மற்றும் அணிகள் மட்டுமே மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதி பெறுவர்.

ஒருங்கிணைந்த போட்டிகளில் ஊராட்சி ஒன்றிய அளவில் முதல் மூன்று இடங்களுக்கு முறையே ரூ.3,000, ரூ.2,000, ரூ. 1,000 வழங்கப்படும். மாவட்ட அளவில் ரூ. 6,000, ரூ. 4,000, ரூ. 2,000 வழங்கப்படும். மாநில அளவில் அணி பிரிவில் முதலிடம் ரூ. 75,000, இரண்டாம் இடம் ரூ.50,000, மூன்றாம் இடம் ரூ. 25,000 வழங்கப்படும்.

ஊராட்சி மற்றும் மாவட்ட அளவில் 100 மீட்டர் ஓட்டம், குண்டு எறிதல், கபடி, வாலிபால், கயிறு இழுத்தல், ஸ்ட்ரீட் கிரிக்கெட், எறிபந்து போன்ற போட்டிகள் நடத்தப்படுகின்றன.

மாவட்ட அளவில் ஓவியம், கோலப்போட்டி மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான பிரிவுகளும் சேர்க்கப்பட்டுள்ளன. உடல் ஊனமுற்றோருக்கு 100 மீட்டர் ஓட்டம், பார்வையற்றோருக்கு குண்டுஎறிதல், அறிவாற்றல் குறைபாடுடையோருக்கு 100 மீட்டர் ஓட்டம், செவித்திறன் குறைபாடுடையோருக்கு 100 மீட்டர் ஓட்டம் நடத்தப்படும்.

மாவட்ட அளவில் முதலிடம்பெறும்பெண்கள் கபடி அணி மற்றும் ஆண்கள்ஸ்ட்ரீட்கிரிக்கெட் அணிகளுக்கு மட்டுமே மாநில அளவிலான போட்டிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஒருவருக்கு இரண்டு தடகள மற்றும் இரண்டு குழு போட்டிகளுக்கு பங்கேற்க அனுமதி உள்ளது. போட்டிகளில் பங்கேற்க விருப்பமுள்ளோர் ஒரே ஒன்றியத்தில் மட்டும் பங்கேற்கலாம். இணையத்தின் மூலம் ஜனவரி 21 வரை முன்பதிவு செய்யலாம். மேலதிக தகவல்களுக்கு ஆடுகளம் மற்றும் தகவல் தொடர்பு மையத்தை வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 9514000777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று அரசு தெரிவித்துள்ளது.

# விஜய் 'ஜனநாயகனு'க்கு எதிராக வாதாடும் மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா!



விஜய்யின் 'ஜனநாயகன்' திரைப்படத்துக்கு சென்சார் சான்றிதழ் வழங்க நீதிபதி ஆஷா பிறப்பித்த உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்கில் தணிக்கை வாரியம் சார்பாக ஆஜராக சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா ஆஜராகிறார்.

விஜய்யின் ஜனநாயகன் படத்துக்கு U/A சான்றிதழ் வழங்க வேண்டும் என தணிக்கை வாரியத்துக்கு சென்னை உயர்நீதிமன்ற தனிநீதிபதி பிடி ஆஷா இன்று காலை (ஜனவரி 9) உத்தரவிட்டார். இந்த உத்தரவுக்கு எதிராக மத்திய திரைப்பட தணிக்கை வாரியம் மேல்முறையீடு செய்துள்ளது.

இந்த மேல்முறையீட்டு மனுவை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்ற மணிந்திரமோகன்ஸ்ரீவஸ்தவா,நீதிபதிஜி.அருள்முருகன் அமர்வு முன்பாக தணிக்கை வாரியத்தின் சார்பாக ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏஆர்.எல். சுந்தரேசன் வலியுறுத்தினார். இது தொடர்பாக பரிசீலனை செய்வதாக தலைமை நீதிபதி பெஞ்ச் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தற்போது தலைமை நீதிபதி பெஞ்ச் வேறு வழக்குகளை விசாரித்து வருகிறது. மேலும் தணிக்கை வாரியம் சார்பாக சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா வாதங்களை முன்வைக்க இருக்கிறார்.

# மாணவர்களுக்கு மாலை நேரத்தில் 'நியூட்ரிஷன் ஸ்நாக்ஸ்' வழங்க பரிந்துரை

தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், மாணவர்களின் ஊட்டச்சத்து தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மதிய உணவு (சத்துணவு) மற்றும் காலை உணவு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

காலை உணவுத் திட்டத்தின் கீழ், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு வெண் பொங்கல், ரவா கிச்சடி, சேமியா கிச்சடி, இட்லி போன்ற உணவுகள் வழங்கப்படுகின்றன.

அதேபோல், சத்துணவுத் திட்டத்தின் கீழ், ஒன்று முதல் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மதியம் சாதம், சாம்பார், கீரை, காய்கறி, முட்டை உள்ளிட்ட உணவுகள் வழங்கப்படுகிறது.

இந்நிலையில், பள்ளி மாணவர்களின் ஊட்டச்சத்து அளவை மேலும் மேம்படுத்தும் நோக்கில், தினசரி மாலை நேரத்தில் 'நியூட்ரிஷன் ஸ்நாக்ஸ்' வழங்க பொதுச் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து துறை பரிந்துரை செய்துள்ளது.

இதன் கீழ் வாழைப்பழம், ஆப்பிள் மற்றும் சிறுதானியப் பொருட்கள் அடங்கிய ஆரோக்கியமான சிற்றுண்டிகள் வழங்கப்படுமென தகவல் வெளியாகியுள்ளது. இந்த பரிந்துரை தற்போது சமூக நலத் துறையின் பரிசீலனையில் உள்ளது.

# பெரியநாயக்கன்பாளையத்தில் ராம்ராஜ் காட்டனின் புதிய ஷோரூம் திறப்பு



ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் புதிய ஷோரூம் பெரியநாயக்கன் பாளையம், ஊட்டி மெயின் ரோடு, சதியா எதிரில் வாடிக்கையாளர்களுக்காக திறக்கப்பட்டது. கோயம்புத்தூர் சால்ஜர் எலக்ட்ரோனிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆர். துரைசாமி ஷோரூமை திறந்து வைத்தார்.

சிரியா, ஐக்கிய நாடுகள் சபை ஜெனிவா சிறப்பு தூதுவர் அலுவலகத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ராஜா பி. ஆறுமுகம் திருவிளக்கேற்றி விழாவை தொடங்கிவைத்தார். அமெரிக்காவின் 'கசடற டெக்னாலஜி சொல்யூஷன்ஸ்' மேனேஜிங் பார்ட்னர் கந்த. சிவக்குமார் முதல் விற்பனையை துவக்கிவைத்தார். கோவை பெரியநாயக்கன்பாளையம் யுனைடெட் இன்ஸ்ட்டியூட் ஆஃப் டெக்னாலஜி நிறுவனரும் தலைவருமான எஸ். சண்முகம் முதல் விற்பனையைப் பெற்றுக்கொண்டனர். விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் ராம்ராஜ் காட்டன் நிர்வாக இயக்குநர் பி.ஆர். அருண் ஈஸ்வர் மற்றும் இணை நிர்வாக இயக்குநர் எஸ். அஸ்வின் ஆகியோர் வரவேற்றனர். திருப்பூரைச் சேர்ந்த ஹீரோ ஃபேஷன் சுந்தரமூர்த்தி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# 'ஷெல் ஈக்கோ-மராத்தான்' போட்டியில் பங்கேற்கவுள்ள குமரகுரு கல்லூரி மாணவர்கள்




சர்வதேச அளவில் புகழ்பெற்ற 41-வது 'ஷெல் ஈக்கோ-மேரத்தான்' ஆசிய-பசிபிக் போட்டிகள், கத்தார் நாட்டில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

இந்த போட்டியில், கோவை குமரகுரு கல்வி நிறுவனங்களை சேர்ந்த 14 மாணவர்களை கொண்ட அணியான 'டீம் ரிநியூ', ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் தங்களின் புதிய முன்மாதிரி வாகனத்தை உருவாக்கியுள்ளனர். இந்த அணியே இப்போட்டியின் ஹைட்ரஜன் எரிபொருள் பிரிவில் இந்தியா சார்பாகப் பங்கேற்கும் ஒரே அணி என்ற பெருமையை பெற்றுள்ளது.

இவர்களின் அறிமுகமும், இந்த வாகனத்தின் அறிமுக நிகழ்வும் குமரகுரு கல்வி நிறுவனங்கள் வளாகத்தில் நடைபெற்றது. ப்ரோபெல் இ.வி. நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் குறிச்சி குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு குமரகுரு கல்வி நிறுவனங்களின் தலைவர் சங்கர் வானவராயர் இந்த வாகனத்தை அறிமுகம் செய்தார். தொடர்ந்து மூன்றாவது முறையாக சர்வதேச அளவில் புகழ்பெற்ற இந்த ஷெல் ஈக்கோ-மேரத்தானில் டீம் ரிநியூ பங்கேற்கிறது. இந்த ஆண்டு ஜனவரி 21 முதல் 25 வரை கத்தார் நாட்டின் தோஹாவில் உள்ள லுசைல் சர்வதேச சர்க்யூட்டில் இந்தப்போட்டி நடைபெறுகிறது.

இந்தஅணியில்குமரகுரு கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த 14 மாணவர்கள் உள்ளனர், இவர்களில் பெரும்பாலானோர் பொறியியல் துறையைச் சேர்ந்தவர்கள். அஸ்வின் கார்த்திக் இந்த அணியின் கேப்டனாகவும், செல்வி. ஷோபிகா வாகனத்தின் ஓட்டுநராகவும் செயல்படுகின்றனர்.

# திருமலையாம் பாளையத்தில் மாதிரி அங்கன்வாடி மையம் திறப்பு

## மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர் திறந்து வைத்தார்

THE KOVAI HERALD




'டைட்டன் பெயிண்ட்ஸ் பிரைவேட்லிமிடெட்'நிறுவன சமூக பொறுப்புணர்வு திட்டத்தின்கீழ்(சிஎஸ்ஆர்) கோவை, திருமலையாம் பாளையத்தில் அமைந்துள்ள மாதிரி அங்கன்வாடி மையம் ஜனவரி 4-ம் தேதி திறந்து வைக்கப்பட்டது.

கோவை மாவட்ட ஆட்சியர்பவன்குமார்கிரியப்பனவர் மற்றும் அத்வைக் லட்சுமி குழுமத்தின் மேலாண்மை இயக்குனர் ரவி சாம் ஆகியோர் திறந்து வைத்தனர். இந்நிகழ்வில் ஐ.சி.டி.எஸ் மாவட்ட திட்ட அலுவலர் தேவகுமாரி மற்றும் அத்வைத் லட்சுமி குழுமத்தின் இயக்குனர் நாகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த திட்டத்தின் மூலம் அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் புதிய கழிப்பறை, சுற்றுச்சுவர், தரைமேம்பாடு, பாதுகாப்பான குடிநீர் வசதி, சுவர் ஓவியங்கள் மற்றும் வரைவுக்கலை பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் குழந்தைகளுக்கான பாதுகாப்பான சுத்தமான மற்றும் மகிழ்ச்சியான கற்றல் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது என, அத்வைக் லக்ஷ்மி குழுமத்தின் மேலாண்மை இயக்குனர் ரவி ஷாம் தெரிவித்தார்.

## சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி சார்பில் போதையில்லா தமிழ்நாடு விழிப்புணர்வு சைக்கிள் பேரணி




திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம் அலகு-2, போதை எதிர்ப்பு குழு, மற்றும் மாவட்ட மாநகர காவல்துறையுடன் இணைந்து கல்லூரி சாலையில் போதையில்லா தமிழ்நாடு விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு அலகு - 2 ஒருங்கிணைப்பாளர் மோகன்குமார் முன்னிலை வகித்தார்.

கோவை மாநகர காவல் ஆணையர் அலுவலக உதவியாளர் திருநாவுக்கரசு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேரணியை துவக்கிவைத்து பேசினார். மாநகர போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் பழனிசாமி வாழ்த்தி பேசினார்.

மாணவ செயலர்கள் கிருஷ்ணமூர்த்தி, நவீன்குமார், ரேவதி, பிரியங்கா, திவாகர், பிரவீன் ஆகியோர் தலைமையில் மாணவ மாணவிகள், இனியாவது திருந்துவோம் போதையை ஒழிப்போம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய சைக்கிள்களில் பேரணி சென்றனர். நிகழ்விற்கான ஏற்பாட்டினை கல்லூரி முதல்வர் கிருஷ்ணன் செய்திருந்தார்.

# தமிழகத்தின் திரிலிங்கான அகஸ்தியர் மலை ஏற வேண்டுமா?

## நீங்கள் செய்ய வேண்டியது என்ன?



பெண்கள் நுழைய முடியாத பகுதியில் அகஸ்திய முனி குடியிருக்கிறார். அதாவது, பொதிகை மலையின் உச்சியில் அகஸ்திய முனியின் சிலை உள்ளது. இதை , காண ஆண்டு முழுவதும் மக்களுக்கு அனுமதி இல்லை. அதுவும், தமிழகப்பகுதியில் இருந்து அகஸ்தியர் கூடத்துக்குச் செல்ல அனுமதியில்லை. இது மிகவும் ஆபத்தான டிரெக்கிங் பகுதி என்பதால் தமிழக வனத்துறை முற்றிலும் தடை விதித்து விட்டது. தமிழகப்பகுதியில் இருந்து அனுமதியில்லை என்றாலும் கேரள வனத்துறையின் அனுமதி வாங்கி திருவனந்தபுரத்திலிருந்து நெய்யாற்றின்கரை வனச்சரகத்தில் போனக்காடு வழியாகச் செல்ல முடியும். ஆபத்தான செங்குத்தான பாறைகள் நிறைந்த இந்த ட்ரெக்கிங் பாதை 25 கிலோ மீட்டர் தொலைவு கொண்டது. மலையில் 6,500 அடி உயரம் ஏறி இறங்க மூன்று நாள்கள் ஆகும். இந்த ஆண்டு ஜனவரி 14ம் தேதி முதல் பிப்ரவரி 11ம் தேதி வரை அகஸ்தியர் கூடம் செல்ல அனுமதிக்கப்படுகிறது. இதற்கு, tvmwildlife.com என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். ஒருவருக்கு 3 ஆயிரம் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. நாள் ஒன்றுக்கு 100 பேர் மட்டுமே மலை ஏற அனுமதிக்கப்படுவார்கள். வெளிநாட்டவர்களுக்கு அனுமதி கிடையாது. இங்கு டிரெக்கிங் செல்ல நல்ல உடல்நலத்துடன் இருப்பது அவசியம். இதனால், டிரெக்கிங் செல்வதற்கு 7 நாட்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட மருத்துவ சான்றிதழ் காட்டினால் மட்டுமே மலை ஏற அனுமதிக்கப்படுவார்கள். ஜனவரி முதல் வாரத்தில் 14ம் தேதி முதல் 31ம் தேதி வரை அகஸ்தியர் கூடம் செல்ல ஆன்லைனில் விண்ணப்பித்து ஏராளமானோர் அனுமதி பெற்றுள்ளனர். பிப்ரவரி மாதம் செல்வதற்கு ஜனவரி 3வது வாரத்தில் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

அகஸ்தியர் சிகரம்தான் ஆனைமுடிக்கு அடுத்தபடியாக தென்னிந்தியாவின் உயர்ந்த சிகரம். இங்கிருந்துதான் தாமிரபரணி, நெய்யாறு போன்ற நதிகள் உற்பத்தியாகின்றன. சுமார் 2,500 மேலான அரியவகை மூலிகைச் செடிகள், மரங்கள் நிறைந்த யுனெஸ்கோவின் பாதுகாக்கப்பட்ட பூகோளப் பகுதியாக இது அறிவிக்கப்பட்டுள்ளது. டிரெக்கிங் பாதை எங்கும் அருவிகள் உள்ளதால், எங்கெங்கும் குளியல் போட்டுக்கொள்ளலாம். பாம்புகள், பூச்சிகள் ஏராளமாக காணப்படும். மதுபாட்டில்கள், சிகரெட் பாக்கெட்டுகள் இருந்தால் பறிமுதல் செய்துவிடுவார்கள். கடுமையான மலைப்பாதை என்பதால், 14 வயதுக்கு குறைந்தவர்களுக்கு அனுமதியில்லை. நீண்ட தொலை டிரெக்கிங் பாதை என்பதால் குழுவை விட்டு பிரிந்து செல்ல அனுமதியில்லை. முதல் நாளில் 12 கி.மீ தொலைவு நடக்கவேண்டும். அன்றைய தினம் இரவு அதிரிமலையில் உள்ள கேம்ப்பில் தங்கிக் கொள்ளலாம். உங்களுடன் வரும் வனத்துறை வழிகாட்டிகள்தான் உங்களுக்கு வயிறு உபாதைகள் தராத எளிமையான உணவுகளை சமைத்து தவருவார்கள். வனத்தில் எப்போது வேண்டுமானாலும் மழை பெய்யலாம். இதனால், 3 நாட்களுக்குள் டிரெக்கிங்கை முடிக்க முடியாத சூழல் ஏற்படலாம். எனவே, டிரெக்கிங் செல்பவர்கள் எதற்கும் தயாராக இருக்க வேண்டும். வழுக்குப்பாறை என்ற இடத்தை அடைந்ததும் , அங்கே உங்களை குறுமுனி வரவேற்பார்.

அகஸ்திய முனி பழங்குடியின மக்களான காணி இன மக்களின் பாதுகாவலராக கருப்படுகிறார். பிரம்மச்சாரியான அகஸ்தியரை வழிபடப் பெண்களுக்கு அனுமதி கிடையாது. சிவராத்திரி தினத்தில் காணி இனத்தைச் சேர்ந்த ஆண்கள் மட்டுமே இங்கு விழா நடத்தி வழிபடுவது வழக்கமாக உள்ளது. காணி இன பெண்களுக்கும் இங்கு வழிபட அனுமதியில்லை. கடந்த 2019ம் ஆண்டில் அகஸ்தியர் கூடத்துக்கு பெண்கள் செல்ல விதிக்கப்பட்டிருந்த தடையை கேரள உயர்நீதிமன்றம் நீக்கியது.

இதைத் தொடர்ந்து, திருவனந்தபுரத்தில் ராணுவச் செய்தி தொடர்பாளராக இருக்கும் தன்யா சனால் என்ற 38 வயது பெண் அகஸ்தியர் கூடத்துக்கு மலை ஏற சென்றார். தன்யா சனால் மலை ஏற எதிர்ப்பு தெரிவித்து மலையின் அடிவார பகுதியான போனகாட்டில் காணி இனப் பெண்கள் பெரும் போராட்டம் நடத்தினார்கள். இதையடுத்து, தன்யா சனால் , 'மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் நான் அகஸ்தியர்கூடம் செல்லவில்லை. அகஸ்தியர் சிலை அருகேவும் செல்லப் போவதில்லை என்று உறுதிபட கூறினார். இதையடுத்து, அவர் அகஸ்தியர் கூடம் ஏற அனுமதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அகஸ்தியர் கூடத்துக்கு சென்ற முதல் பெண்ணும் இவர்தான்.

# கௌமார மடாலயத்தில் முப்பெரும் விழா




கௌமார மடாலயத்தை நிறுவிய இராமானந்த சுவாமிகளின் 69-வது ஆண்டு குருபூஜை விழா, தண்டபாணி சுவாமிகளின் நூல்கள் வெளியீட்டு விழா, கல்வி, இசை, சமூக சேவைகளில் சாதனை படைத்தவர்களுக்கு விருது வழங்கும் விழா ஆகிய முப்பெரும் விழா கோவை சின்னவேடம்பட்டி கௌமார மடாலயவளாகத்தில் உள்ள குமரகுருபர கடவுள் கலையரங்கில் நடைபெற்றது.

விழாவுக்கு இராமானந்த குமரகுருபர சுவாமிகள் தலைமை தாங்கினார். முன்னாள் கல்லூரி கல்வி இயக்குனர் டாக்டர் குமாரசாமி வரவேற்று பேசினார். விழாவில் தண்டபாணி சுவாமிகளின் நூல்களை பேரூராதீனம் சாந்தலிங்க மருதாசல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகள். பழனி ஆதீனம் சாது சண்முக அடிகளார், தாராபுரம் வரன்பாளையம் திருநாவுக்கரசு திருமடம் மௌன சிவாச்சல அடிகளார், தென்சேரிமலை ஆதீனம் முத்துசிவராமசாமி அடிகளார், காமாட்சிபுரி ஆதீனம் சாக்தஸ்ரீ பஞ்சலிங்கேஸ்வர சுவாமிகள் ஆகியோர் வெளியிட்டனர். அதை தொடர்ந்து அண்ணா பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் பாலகுருசாமி, அவினாசிலிங்கம் பல்கலைக்கழக வேந்தர் குழந்தைவேல், ஐ.நா. சபை சிறப்பு தூதர் ராஜா பி.ஆறுமுகம், மலேசிய நாட்டை சேர்ந்த டாக்டர் ஜெயபாலன் வள்ளியப்பன், லண்டனை சேர்ந்த சிவ. தம்பு, சுவிட்சர்லாந்து நாட்டை சேர்ந்த கணேஷ் குமார், வடவள்ளி திருப்புகழ் குழுவை சேர்ந்த வைத்தியநாதன், மற்றும் கௌமார மடாலயத்தை சேர்ந்த தவில்-நாதஸ்வர கலைஞர்களான கனகராஜ், கோவிந்தராஜ், மாணிக்கராஜ். கணேசன் ஆகியோருக்கு விருது வழங்கப்பட்டது.

மாலையில் ரதயாத்திரை நடந்தது. அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் திருப்பெருந்திரு. இராமானந்த சுவாமிகள் திருவுருவ சிலை வைக்கப்பட்டு சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, சிவானந்தபுரம் பகுதியில் உள்ள 10-க்கும் மேற்பட்ட கோவில்களுக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு ரதத்திற்கு பிரமாண்ட வரவேற்பு கொடுக்கப்பட்டது. பின்னர் ரத யாத்திரை கௌமார மடாலயத்தை வந்தடைந்தது.

## நியாய விலைக்கடைகளை திறந்து வைத்த சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர்.ஜெயராம்



கோவை உப்பிலிபாளையம் பகுதியில் கட்டப்பட்ட 2 நியாய விலைக்கடைகளை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர்.. ஜெயராம் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாணவரணி செயலாளர் சிங்கை ராமச்சந்திரன் , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மகேஸ்வரி, முன்னாள் சிந்தாமணி தலைவர் சிங்கை முத்து, பகுதி செயலாளர் வெள்ளியங்கிரி, வட்ட செயலாளர்கள் கார்த்திக் அப்துல் காதர், பார்த்தசாரதி, முன்னாள் கவுன்சிலர் சேதுவராசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விமானப் பயணத்தில் பவர் பேங்க் பயன்பாடு தடை: டிஜிசிஏ புதிய உத்தரவு



விமானப் பயணத்தின் போது பாதுகாப்பை அதிகரிக்கும் நோக்கில், இந்திய சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் பவர் பேங்க் பயன்படுத்துவதற்கு தடை விதித்துள்ளது. மொபைல் போன் மற்றும் லேப்டாப்களை சார்ஜ் செய்ய பவர் பேங்க் பயன்படுத்துவது இனி விமானத்தில் அனுமதிக்கப்படாது.

பவர் பேங்குகளை விமானத்தில் கொண்டு செல்ல அனுமதி தொடர்ந்தாலும், செக்-இன் லக்கேஜில் வைப்பதோ, இருக்கைகளுக்கு மேல்புறத்தில் உள்ள லக்கேஜ் இடங்களில் வைப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது. பவர் பேங்குகளை கைப்பைகள் மூலமே எடுத்துச் செல்ல வேண்டும். ஆனால் பயணத்தின் போது அதை பயன்படுத்தி சார்ஜ் செய்ய அனுமதியில்லை என டிஜிசிஏ அறிவித்துள்ளது.

லித்தியம் பேட்டரிகள் கொண்ட பவர் பேங்குகள் விமானத்திற்குள் தீப்பற்றும் அபாயம் உள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். லித்தியம் பேட்டரியால் ஏற்படும் தீ விபத்துகள் அதிக ஆற்றலுடன் தொடர்ந்து எரிவதால், கட்டுப்படுத்துவது சிரமம். மேலும், அது பிற மின்னணு சாதனங்களையும் பாதிக்கக்கூடும். கைப்பையில் வைத்திருப்பதால், எதிர்பாராத தீப்பற்றும் நிலையிலும் பயணிகள் அல்லது குழுவினர் உடனடியாக கவனித்து நடவடிக்கை எடுக்க முடியும் என டிஜிசிஏ விளக்கியுள்ளது.

விமானங்கள் புறப்படுவதற்கு முன், பவர் பேங்குகளை சார்ஜ் செய்யக்கூடாது என்பதை பயணிகளுக்கு அறிவிக்க வேண்டும் எனவும் டிஜிசிஏ உத்தரவிட்டுள்ளது. சில மாதங்களுக்கு முன்பு பவர் பேங்க் காரணமாக விமானத்திற்குள் தீ விபத்து ஏற்பட்டு கவலை ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்த உத்தரவு அமலுக்கு வந்துள்ளது.

ஏற்கனவே எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ், சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் உள்ளிட்ட பல சர்வதேச விமான நிறுவனங்கள் பவர் பேங்க் பயன்பாட்டிற்கு தடை விதித்து வருகின்றன. அதே வழியில் இந்தியாவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வலுப்படுத்தியுள்ளது.

## மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தார் சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.ஜி.அருண்குமார்




கோவை கவுண்டம்பாளையம் ராஜீவ் காந்தி வீதி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு பூமி பூஜை செய்து சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.ஜி.அருண்குமார் துவக்கி வைத்தார். உடன் கவுண்டபாளையம் மேற்கு பகுதி செயலாளர் சின்னசாமி மற்றும் துணைப் பகுதி செயலாளர் சிவகுமார், வார்டு செயலாளர் பாலசுந்தரம், அப்பளம் ரவி, மாரிமுத்து, மணிகண்டன், மகேஷ் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் செல்வராஜ் எல். பி. பெரியசாமி, கனகராஜ் ராதிகா ஆகியோர்.

## பிப்ரவரி 13-ஆம் தேதி பாரதியார் பல்கலை. 40-வது பட்டமளிப்பு விழா

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் 40-ஆவது பட்டமளிப்பு விழா பிப்ரவரி 13-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெற உள்ளது. பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறும் இந்த விழாவில் பல துறைகளில் கல்வி பயின்று தகுதி பெற்ற மாணவ-மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகள், பல்கலைக்கழகத் துறைகள், தொலைநிலை கல்வி மற்றும் பிற கல்வித் திட்டங்களின் கீழ் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் முனைவர் பட்டங்கள் வழங்கப்பட இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட தன்னாட்சி பெறாத கல்லூரிகளில் இருந்து 2023-ம் ஆண்டு ஏப்ரல், மே மற்றும் 2024-ம் ஆண்டு கல்வியாண்டில் தேர்ச்சி பெற்ற இளநிலை, முதுநிலை பாடங்களின் முதன்முதலில் மதிப்பெண் பெற்ற மாணவ-மாணவிகளுக்கு அதற்குரிய சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் உயர் அதிகாரிகள், பேராசிரியர்கள், கல்வியாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பங்கேற்க உள்ளதாக பதிவாளர் ஆர். ராஜவேல் தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் "எப்போ வருவாரோ"

## பெண் சக்திகள் பேசிய பக்தி சுரங்கம்

தி கோவை ஹெரால்டு

"எப்போ வருவாரோ ...." - என்ற சொற்றொடர் ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் கோவையின் ஆன்மீக அன்பர்களுக்கு பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டு விடுகிறது இயல்பான ஒன்று.

கோபாலகிருஷ்ண பாரதி இயற்றிய பாடலின் முதல் அடியே" எப்போ வருவாரோ..." இதனை மதுரை மணி ஐயர் கர்நாடக சங்கீதத்தில் பாடியது பட்டி தொட்டி எங்கும் பிரபலமான பாடல். ஆம்....! ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனத்தார் கிக்கானிபள்ளியில் நடத்தும் உன்னதமான, உயர்வான, உயிரோட்டமான நிகழ்வு 10 நாட்கள் பக்தித் தொடர்.



இந்திய கலாச்சாரம் பக்தியோடு இரண்டறகலந்தது. அதனை அனைவருக்கும் நினைவூட்டும் நிகழ்வாகவே ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் நாள் முதல் 10-ம் நாள் வரை சைவம், வைணவம் உள்ளிட்ட சமயங்களாக வாழ்ந்த ஆன்மீக அருளாளர்களின் அருந்தவ வாழ்வை ,பேச்சுலகின் பேராளுமைகள், இனிய, எளிய தமிழில் அனைவரின் கண் முன் கொண்டு வந்து நிறுத்துவது அலாதியானது. 2026-ம் ஆண்டு விண்சக்தி எழுந்தருளிய விரிவான அரங்கம் களை கட்டியது. பெண் சக்தி ஆளுகின்ற பக்திச் சுரங்கமாக ஊற்றெடுத்தது.

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனர் கிருஷ்ணன் தலைமை வகித்த 10 நாள் நிகழ்வுகளில், முதல் நாள் பட்டி மன்ற பேச்சாளர் பாரதி பாஸ்கர் ஞானசம்பந்த பெருமான் பற்றி நயமாக பேசினார்.

அம்மையப்பர், பாலகன் ஞானசம்பந்தனுக்கு ஞானப்பால் ஊட்டிய அற்புத நிகழ்வை அச்சுப் பிறழாமல் எடுத்துரைத்தார். தெய்வச்சக்கிழார் அற்புதமான பெரிய புராணத்தை நமக்கு அளித்தது, சைவக் கருவூலம் என்று சொன்னால் மிகையாகாது என்றார்.

தொடர்ந்து இரண்டாம் நாள் அமர்வில், பேச்சாளர் விசாலாட்சி, காரைக்கால் அம்மையார் குறித்து கனிவுடன் பேசியது அனைவரையும் கவர்ந்தது. எத்தனை இடர்கள் வந்தாலும், கொண்ட கொள்கையில் உறுதியாக இருக்க வேண்டும் என்ற படிப்பினையை காரைக்கால் அம்மையார் நமக்கு உணர்த்திச் சென்றுள்ளார். தமது கணவனே, தம்மை தெய்வமாக போற்றும் நிலைக்கு உயர்ந்தவர் நம் அம்மையார் என பேசினார். கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனர் கிருஷ்ணன் நடத்திய இந்த ஆன்மீக நிகழ்வில் ஏராளமானூர் கலந்து கொண்டனர்.



### 3-ம் நாள் நிகழ்வில் முனைவர் ஜெயந்தி ஸ்ரீ பாலகிருஷ்ணன், ராமகிருஷ்ண பரமஹம்சர் குறித்து பேசுகையில்,

1836-ல் மேற்குவங்க மாநிலம் கல்கத்தாவில் அவதரித்த ராமகிருஷ்ண பரமஹம்சர், மிகச்சிறந்த காளி பக்தர் ஆவார். நம்மை படைத்த கடவுளை, ஓவியத்தாலும், களி மண் உருவத்தாலும் வைத்து வணங்குவதில் பேரார்வம் கொண்டவர். தமது சகோதரருக்குப் பின், காளி தேவிக்கு பூசகராக இருந்து தேவிக்கு தினம்தோறும் ஆலாபனை செய்தவர். காளி தேவியை தாயாக எண்ணி வழிபட்டவர். வாழ்வுக்குரிய அற நெறிகளை போதித்தவர் ராமகிருஷ்ண பரமஹம்சர். சில நாட்கள் பயிற்சியிலேயே நிறைநிலை அடைந்த உயர்ந்த அருளாளர் ராமகிருஷ்ண பரமஹம்சர் என்று சொன்னால் மிகையாகாது என பேசினார்.



### 3-ம் நாள் நிகழ்வில் வழக்கறிஞர் க.சுமதி சதாசிவ பிரம்மேந்திரர் குறித்து பேசுகையில்

அப்போது அவர், நமது பாரத நாடு ஞானியர்களையும் முனிவர்களையும் நமக்கு நிரம்ப அளித்துள்ளது.

நான் வேறு ;எதிரே இருப்பது வேறு அல்ல என்ற பிரம்மத்தை நமக்கு அருளியவர் சதாசிவ பிரம்மேந்திரர். சம்சார வாழ்வில் இருந்து அகன்று, ஞான மார்க்கத்தில் தொடர்ந்து ஈடுபட்டவர். மனிதனுக்கு ஏற்படும் அகந்தையை அனைவரும் விட்டு விட வேண்டும் என அறிவுறுத்தியவர் என குறிப்பிட்டார்.

### 5-ம் நாள் நிகழ்வில் நம்மாழ்வார் பற்றி ஜெயந்தி ஐயர் பேசுகையில்,



பன்னிரு ஆழ்வார்களில் நம்மாழ்வார் மிக முக்கியமாக போற்றப்படுபவர்.அவர் தம் திரு வாய் மொழியில் பாடியபடி மோட்சம் செல்லும் வழியை குறிக்கும் வகையில் பரமபத வாசல் வழியாக பெருமாள் எழுந்தருளும் நிகழ்வு இன்றும் நிகழ்ந்து வருகிறது. அந்த அளவுக்கு நம்மாழ்வாரின் திருவாய்மொழி பாடல் போற்றப்படுகிறது.திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி ஆகிய நான்கு திரு மறை நூலை நம்மாழ்வார் நமக்காக அருளி சென்றவர் என குறிப்பிட்டார்.

### 6-ம் நாள் நிகழ்வில் அபிராமி பட்டர் குறித்து பேச்சாளர் வாசுகி மனோகரன் பேசுகையில்



சோழ நாட்டின் காவிரி கரையில் உள்ள திருக்கடவூரில் பிறந்தவர் அபிராமி பட்டர்.

சிறு வயது முதலே, அபிராமி அமிர்தகடேஸ்வரரின் பரம பக்தரான இவர், சாக்த வழிபாடு எனும் அம்பிகையை வழிபடும் நெறியில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டார். அவர் இயற்றிய அபிராமி அந்தாதி பாடல்கள் ஒவ்வொன்றும் நமது வாழ்விற்கு ஏற்றமும் எழுச்சியும் கொடுப்பவை. விதியை மாற்றக்கூடிய ஸ்தலமே அபிராமி பட்டர் வணங்கிய திருக்கடையூர் ஆகும் என்றார்.

### 7-ம் நாள் நிகழ்வில் அவ்வையார் குறித்து புதுகை ச.பாரதி பேசுகையில்,



தமிழ் பெரும் மூதாட்டி அவ்வையார், குறித்த ஆய்வுகள் இன்று வரை தொடர்கிறது. சங்ககாலத்தில் எட்டு அவ்வையார் 12 ஔவையார் இருந்ததாக இன்றுவரை ஆய்வுகள் தொடர்வதால் அதற்கு முடிவே இல்லை. அவ்வை பிராட்டியின் பாடல்களின் பரிணாமம் பிரமிப்பை ஊட்டுவதாக உள்ளது.

திருக்குறளைப் போல ஔவையார் குரல் என்ற தனியாக தொகுப்பும் உள்ளது. நீதி நெறி உடன் வாழ அவ்வையாரின் அருள் மொழிகள் நமக்கு துணையாக இருக்கும் என குறிப்பிட்டார்.



### 8-ம் நிகழ்ச்சியில் வடலூர் வள்ளற் பெருமாள் குறித்து தேவி லட்சுமி பேசுகையில்,

200 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வடலூர் வள்ளற்பெருமாள் ஜீவகாருண்யத்தை சிரமேற்றவர். கொல்லாமையை உறுதிப்பாடுடன் இருந்து செயல்பட்டவர். அனைத்து கடவுள்களையும் தமது திரு அருட்பாவில் பாடியுள்ளார். 'மனம் " தான் நமக்கு இருக்கும் பிரச்சனை .

எங்கும் நீக்க மற நிறைந்திருக்கும் இறைவனை நம் உள்ளத்தில் வைத்தால் போதும். அன்பு வேறு ;சிவம் வேறு அல்ல .ஒழுக்கத்திற்காக எதையும் இழக்கலாம் ஆனால் எதற்காகவும் ஒழுக்கத்தை இழக்கக்கூடாது என வலியுறுத்தியவர் வள்ளலார். அருட்பெரும் ஜோதி ஆண்டவரை கண்ட வள்ளற் பெருமானின் கருத்துக்கள் இன்றைய நவீன யுகத்திற்கும் சாலப் பொருத்தமாக உள்ளது என்றார்.



### 9-ம் நாள் நிகழ்வில் ஆதிசங்கரர் குறித்து முனைவர் குரு ஞானாம்பிகா பேசும் போது,

கேரள மாநிலம் காலடியில் அவதரித்த ஆதி சங்கரர், இந்து மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் என்று சொன்னால் மிகை ஆகாது. நாடு முழுவதும் காலர நடந்து சென்று சமயத்தை வளர்த்தவர். அதனால் அவர் "ஜகத்குரு "என போற்றப்படுகிறார். தன் தாயின் மீது அளவலாத பற்றுக் கொண்டிருந்த ஆதி சங்கரர், அவரது மறைவிற்கு இறுதி சடங்குகளை செய்தவர். பொதுவாக சன்னியாசிகளுக்கு இது விதி விலக்காகும். அதையும் தாண்டி தாயின் மீது கொண்ட பற்றால் இதனை நிகழ்த்தினார். நாடு முழுவதும் நான்கு மடங்களை நிறுவி, வேதம் தழைக்க வித்திட்டவர். 32 ஆண்டுகள் மட்டும் இப்புவியில் வாழ்ந்த ஆதி சங்கரர்,அத்வைதத்தை நமக்கு அளித்துச் சென்றார். கைலாயம் சென்று ஐந்து சிவலிங்கங்களை பெற்று வந்தவர் என சிவ ரகசியம் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆணவம், கர்வம் தவிர்க்கப்பட வேண்டியது எனஆதிசங்கரர் அறிவுறுத்திச் சென்றார் என குறிப்பிட்டார்.

# பெண்கள் பாதுகாப்பில் தமிழக நகரங்கள் முன்னிலை

## 2வது சென்னை, 10வது கோவை



பெண்களுக்கு பாதுகாப்பான நகரங்களின் தரவரிசையில் தமிழ்நாட்டின் நகரங்கள் பிறமாநிலங்களை விட அதிக அளவில் இடம்பெற்றுள்ளன. பணியிட கலாச்சார ஆலோசனை நிறுவனமான 'அவதார்' குழுமம் வெளியிட்ட பட்டியலில் இந்த விபரங்கள் பதிவாகியுள்ளன.

பெண்களுக்கு பாதுகாப்பு, உள்கட்டமைப்பு வசதிகள், சுகாதார சேவைகள், வேலைவாய்ப்பு சூழல், பெண்களுக்கான உள்ளடக்கிய பணியிடங்கள், தொழில்முனைவோருக்கான ஆதரவு போன்ற பல்வேறு காரணிகளை ஆய்வு செய்து நாடு முழுதும் 125 நகரங்கள் மதிப்பிடப்பட்டன. இந்த பட்டியலில், 53.29 சி.ஐ.எஸ். குறியீட்டுடன் கர்நாடக மாநில தலைநகர் பெங்களூரு முதலிடத்தை பிடித்துள்ளது. 49.86 புள்ளிகளுடன் தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை 2வது இடத்தில் உள்ளது. புனே (46.27) 3வது இடம், ஹைதராபாத் (46.04) 4வது இடம் மற்றும் மும்பை (44.49) 5வது இடங்களில் அமைந்துள்ளன. தமிழ்நாட்டிலிருந்து ஆறு நகரங்கள் முன்னணி தரவரிசையில் இடம்பெற்றுள்ளன. கோயம்புத்தூர் 10வது இடம், திருச்சி 13வது இடம், மதுரை 15வது இடம், சேலம் 18வது இடம், வேலூர் 19வது இடம் மற்றும் ஈரோடு 25வது இடங்களில் இடம்பெற்றுள்ளன.

## 3 முதல் 6 மாதங்கள்தான் உயிர் இருக்கும்

# இருண்டகாலம் குறித்து மனம் திறந்த யுவராஜ்

தி கோவை ஹெரால்டு

கடந்த 2011ம் ஆண்டு உலகக் கோப்பை தொடரில் இந்திய அணி கோப்பையை வென்றது. இந்திய வீரர் யுவராஜ் சிங், இந்த தொடர் நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். ஆனால், அதே ஆண்டின் இறுதி கட்டத்தில் யுவராஜின் நுரையீரல் மற்றும் மார்பின் நடுவில் (mediastinal seminoma) என்ற அரிய வகை புற்றுநோய் கண்டறியப்பட்டது. இதனால், அதிர்ச்சியடைந்த அவர், தன்னம்பிக்கையை மட்டும் இழக்கவில்லை. அமெரிக்காவில் கீமோதெரபி சிகிச்சை பெற்று, வெற்றிகரமாக புற்றுநோயில் இருந்து மீண்டு வந்தார். புற்று நோய் கண்டுபிடிக்கப்பட்ட சமயத்தில், 3 முதல் 6 மாதங்கள் மட்டுமே அவரால் உயிர் வாழ முடியுமென்று மருத்துவர்கள் கூறி யுள்ளனர்.



தனது வாழ்க்கையில் நிகழ்ந்த இருண்ட கால நிகழ்வுகள் குறித்து தற்போது, யுவராஜ் சிங் கெவின் பீட்டர்சனுடன் பகிர்ந்து கொண்டார். அப்போது அவர் கூறியதாவது, ஒரு நாள் போட்டிகளில் நான் சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்தாலும் இந்திய டெஸ்ட் அணியில் கிட்டத்தட்ட 7 ஆண்டுகளாக எனக்கு இடம் கிடைக்கவில்லை. 40 டெஸ்ட் ஆட்டங்களில் 12வது வீரராக நான் செயல்பட்டேன். இந்த சமயத்தில்தான் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இடம்கிடைத்தது. அந்த மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்த போதுதான், எனக்கு புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. நான் இடிந்து போனேன். சிகிச்சைக்காக அமெரிக்காவுக்கு செல்ல வேண்டியது இருந்தது.

மருத்துவர்கள் எனது இதயம் மற்றும் நுரையீரலுக்கு இடையே புற்றுநோய் கட்டி இருப்பதாக கூறினர். 3 முதல் 6 மாதங்கள்தான் உயிர் வாழ முடியும் என்றனர். கீமோகிராபி செய்யவில்லை என்றால், எப்போது வேண்டுமானாலும் மாரடைப்பு வரலாம் என்றும் மருத்துவர்கள் கூறினர். அப்போது, எனக்கு சிகிச்சையளித்த மருத்துவர் லாரன்ஸ் யென்ஹார்ன், என்னிடத்தில் "புற்றுநோய் பாதிக்கப்பட்ட மனிதர் போலவே உணரக் கூடாது. எப்போதும் போல மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் " என்று அறிவுரை வழங்கினார். இந்த வார்த்தைகள் எனக்கு மிகுந்த பலத்தை கொடுத்தது. கடைசியில், புற்றுநோயில் இருந்து மீண்டு வந்தேன். மீண்டும் கிரிக்கெட்டும் விளையாடத் தொடங்கினேன். 2011-12 ம் ஆண்டுகள் எனக்கு சோதனையான காலக்கட்டமாக அமைந்தது. இனிமேல், என்னால் முன்பு போல கிரிக்கெட் விளையாட முடியாது என்று பலரும் கூறி வந்தனர். ஆனால், நான் அவர்களின் வார்த்தைகளை பொய்யாக்கினேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

புற்றுநோய் சிகிச்சைக்கு பிறகு மீண்டும் சர்வதேச ஆட்டத்துக்கு திரும்பிய யுவராஜ் சிங் பல சாதனைகளை படைத்தார். 2013ம் ஆண்டு ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக 35 பந்துகளில் 77 ரன்களை விளாசினார். 2017ம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கு எதிராக 150 ரன்களை அடித்தார். ஒரு நாள் போட்டியில் இதுதான் அவரின் அதிகபட்சரன் ஆகும். புற்று நோய் சிகிச்சைக்கு பிறகு, 7 ஆண்டுகள் இந்திய அணிக்காக விளையாடிய யுவராஜ் சிங் 2019ம் ஆண்டு கிரிக்கெட்டில் இருந்து முற்றிலும் ஓய்வு பெற்றால்.

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு, புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வில் யுவராஜ் சிங் ஈடுபட்டு வருகிறார். கடந்த 2015ம் ஆண்டு பிரிட்டன் நடிகை ஹசல் கீச்சை காதலித்து யுவராஜ் சிங் திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு ஓரியன் என்ற மகனும் ஆவுரா என்ற மகளும் உள்ளனர்.

# மதுரோ கைது; லாபத்தில் திளைத்த நைக் நிறுவனம்...பின்னணி என்ன?

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளார் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

பல உலக நாடுகள் இந்த கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. வெனிசூலா அதிபர் மதுரோ ஈரான் உச்சபட்ச தலைவர் அயேதுல்லா அலி கெமானியுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார்.

இதனால், ஈரானின் உச்சபட்சத்தலைவருக்கும் ஆபத்து வரலாம் என்று பரவலாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால், அயேதுல்லா அலி கெமானி மற்றும் கெமானிக்குபிறகுபதவிக்கு வரவுள்ள அவரின் மகன் முஸ்தபா உள்ளிட்ட 20பேர் ரஷ்யாவில்அரசியல்தஞ்சம் புக திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மதுரோ கைது செய்யப்பட்ட போது, Nike Tech fleece tracksuit,சாம்பல் நிற டிராக்சூட், மற்றும் பனியன் அணிந்திருந்தார். மதுரோவுக்கு டிராக் சூட் அணிவது மிகவும் பிடித்த விஷயம்.நைக்தயாரிப்பான இந்த டிராக் சூட் தற்போது உலகம் முழுக்க பரவி வருகிறது. நைக் நிறுவனம் கேட்காமலேயே மதுரோ, அந்த நிறுவனத்துக்கு விளம்பர தூதராக செயல்பட்டிருப்பதாக பலரும் காமெடியாக குறிப்பிட்டு வருகின்றனர். அவர் அணிந்திருந்த நைக் டிராக் சூட் கைது செய்யப்பட்ட சில மணி நேரத்தில் விற்று தீர்ந்தன. அமெரிக்காவில் இந்த ரக டிராக்சூட்கள்145டாலருக்கும் ஜாக்கெட்டுகள் 125 டாலர்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. இந்தியாவில் இந்த ரக டிராக்சூட் ரூ.6,995 என்கிற அளவில் விற்பனையாகின்றன.

இதற்கிடையே, கைது செய்யப்பட்ட நிக்கோலஸ் மதுரோ நியூயார்க் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது, செய்தியாளர்களிடத்தில், தன்னை கடத்தி வந்து விட்டதாக கூறினார். தொடர்ந்து,நீதிபதிஆல்வின் ஹெல்லர்ஸ்டனிடத்தில் ஸ்பானிஷ் மொழியில் பேசிய மதுரோ, "நான் வெனிசூலா குடியரசின் அதிபர்.

கடந்த 3ம் தேதி முதல் என்னை கடத்தி வைத்துள்ளனர். கரகாஸ் நகரில்எனதுவீட்டில்இருந்த என்னை கடத்தியுள்ளனர். நான்குற்றம்செய்யாதவன். அப்பாவி. எனது மனைவி முற்றிலும் நிரபராதி "என்றார்.

இந்த சமயத்தில் நீதிமன்றத்தில் இருந்த ஒருவர், 'மதுரோவை பார்த்து, நீ செய்த குற்றங்களுக்கு இப்போது விலை கொடுத்து கொண்டிருக்கிறாய்' என்று கத்தினார்.

ஆனால், இதற்கு மதுரோவிடம் இருந்து எந்த எதிர்ப்பும் இல்லை. நீதிமன்றத்தில்அமைதியாக இருந்தார்.

அதேவேளையில் அமெரிக்க அரசின் தரப்பில் மதுரோ மீது, தீவிரவாத செயல்களுக்கு துணை போனதாகவும் கொகைன்போன்றபோதை பொருட்களை கடத்த உதவிக்கரமாக இருந்ததாகவும் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். மதுரோவின் மனைவி மற்றும் மகன்கள் மீதும் இதே குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டது.

ஆனால், இந்த விவகாரத்தில் மதுரோ மற்றும் அவரின் மனைவி ஜாமீன் கேட்கவில்லை. இதனால், இருவரும் தொடர்ந்து, அமெரிக்க போலீசாஸ் கஸ்டடியில் உள்ளனர். இந்த வழக்கின் அடுத்த விசாரணை மார்ச் 17ம் தேதி வருகிறது.

### 3 ஆண்டுகளுக்குப் பிறகு

# கோவை விமான நிலைய தற்போதைய நுழைவாயில் எவ்வாறு மாறப்போகிறது என்று தெரியுமா?

## விமான நிலைய அதிகாரிகள் சுவாரசிய தகவல்



கோவை விமான நிலைய விரிவாக்கப் திட்டப் பணிகள் தொடங்கியுள்ள நிலையில், புதிய கட்டிடம் கட்டப்பட்ட பின் எதிர்வரும் ஆண்டுகளில் தற்போது உள்ள வருகை மற்றும் புறப்பாடு உள்ளடக்கிய நுழைவாயில் பகுதி தனிநபர் விமானங்கள் இயக்கவும், 'ஏர் டாக்ஸி' அறிமுகமானால் அதன் மையமாக மாற்றப்பட வாய்ப்புள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோவை விமான நிலையம் கோவை உள்பட திருப்பூர் நீலகிரி ஈரோடு சேலம் நாமக்கல் கரூர் உள்ளிட்ட ஏழு மாவட்ட மக்களுக்கு பயன் அளித்து வருகிறது. சென்னை டெல்லி பெங்களூரு மும்பை உள்ளிட்ட உள்நாட்டின் பல்வேறு நகரங்களுக்கும் சார்ஜா சிங்கப்பூர் அபுதாபி ஆகிய மூன்று வெளிநாடுகளுக்கும் நேரடி விமான சேவைவழங்கப்படுகிறது.தினமும்30 விமானங்கள் இயக்கப்படுகின்றன. ஆண்டுதோறும் 35 லட்சத்துக்கும் மேற்பட்ட பயணிகள் கோவை விமான நிலையத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

கோவை விமான நிலைய வளர்ச்சி கருத்தில் கொண்டு கடந்த 2010 ஆம் ஆண்டு திமுக ஆட்சியில் 627 ஏக்கரில் விமான நிலைய விரிவாக்க திட்டம் அறிவிக்கப்பட்டது. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு இந்திய விமான நிலைய ஆணையகத்திடம் எவ்வித நிபந்தனையும் இன்றி தமிழக அரசு ஒப்படைத்துள்ளது. முதல் கட்டமாக சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் தொடங்கியுள்ளன. இத்தகைய சூழலில் தற்போது உள்ள நுழைவாயில் கட்டிடம் எத்தகைய மாற்றம் பெறும் என்ற தகவல் வெளியாகி உள்ளது.

இதுகுறித்து கோவை விமான நிலை அதிகாரிகள் கூறியதாவது:

கோவை விமான நிலையத்தில் விரிவாக்க திட்ட பணிகள் சுற்றுச்சுவர் கட்டும் பணிகளுடன் தொடங்கியுள்ளன. ஓராண்டுக்குள் நிறைவடையும் வகையில் திட்டமிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த கட்டமாக புறப்பாடு மற்றும் வருகைபகுதிக்குஎனபிரத்யேகபுதிய கட்டிடம் கட்டும் பணி தொடங்கும். இது போன்று தமிழக அரசு வழங்கியுள்ள நிலத்தில் சர்வதேச தர அந்தஸ்துக்கு ஏற்ப ஓடுபாதை நீளம் அதிகரித்தல், பயணிகளுக்கு பல்வேறு அதிநவீன வசதிகளை உருவாக்கி கொடுப்பது போன்ற சர்வதேச விமான நிலையத்திற்கு தேவையான அனைத்து உள்கட்டமைப்புநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

விரிவாக்கத் திட்டத்தின்கீழ் நுழைவாயில்பகுதிவேறுஇடத்திற்கு மாற்றப்படுவதால், புதிய கட்டிடம் கட்டும் பணிகள் நிறைவடைந்து முழு வீச்சில் புதிய நுழைவாயில் பகுதிசெயல்பட தொடங்கும்போது, தற்போதுள்ள நுழைவாயில் பகுதி தனி நபர்களுக்கு சொந்தமான விமானங்கள் இயக்கும் பிரத்யேக பகுதியாக மாற்றப்படும்.

அதேபோல் பெங்களூரை சேர்ந்த 'SARLA AVIATION' என்ற நிறுவனம் 2028 ஆம் ஆண்டு ஏர் டாக்ஸி என்ற திட்டத்தை இந்தியாவில் அறிமுகம் செய்ய திட்டமிட்டு தீவிரமாக செயல்பட்டு வருகிறது. எனவே அத்தகைய ஏர் டாக்ஸி வசதி கோவையில் தொடங்கப்பட்டால் தற்போதுள்ள நுழைவாயில் பகுதி அத்தகைய சேவைக்கு பயன்படுத்தப்படும். ஏர் டாக்ஸி சேவை அறிமுகப்படுத்தினால் கோவையிலிருந்து கரூர் ஈரோடு போன்ற பகுதிகளுக்கு விரைந்து செல்ல உதவும். குறிப்பாக தொழில்துறைக்கு பெயர் பெற்ற கொங்கு மண்டலத்திற்கு இத்தகைய சேவை இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இவ்வாறு விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இந்திய ஜவுளித் துறையின் வளர்ச்சி டெக்ஸ்-ராம்ப்ஸ் திட்டத்தின் கீழ் நடவடிக்கை!

நம் நாட்டின் ஜவுளித் துறையை வலுப்படுத்தும் நோக்கில், 15 மாநிலங்களுடன் முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மத்திய ஜவுளி அமைச்சகம் மேற்கொண்டுள்ளது. குவஹாத்தியில் நடைபெற்ற தேசிய ஜவுளி அமைச்சர்கள் மாநாட்டில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. 'டெக்ஸ்-ராம்ப்ஸ்' (Tex-RAMPS) என்ற மத்திய அரசின் திட்டத்தின் கீழ் கைத்தறி, கைவினைப் பொருட்கள், ஆடை உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப ஜவுளி போன்ற துறைகளில் உள்ள தரவு இடைவெளிகளைக் குறைத்து, துல்லியமான திட்டமிடலை மாவட்ட மற்றும் தொகுதி அளவில் கொண்டுவர இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் ஜவுளித் துறையை 350 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான தொழில்துறையாக உயர்த்துவதே அரசின் இலக்காகும்.

இந்த ஒப்பந்தங்கள் 'டெக்ஸ்-ராம்ப்ஸ்' திட்டத்தின் ஒரு பகுதியாகும். இத்திட்டம் தரவு சார்ந்த திட்டமிடலை வலுப்படுத்தி, ஜவுளித் துறையின் வளர்ச்சியை ஊக்குவிக்கும். இதன் மூலம் கைத்தறி, கைவினைப் பொருட்கள், ஆடை உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப ஜவுளி போன்ற பிரிவுகளில் உள்ள தகவல்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, மாவட்ட மற்றும் தொகுதி அளவில் சரியான திட்டங்களை வகுக்க மத்திய அரசு முயற்சி செய்கிறது.

இந்த மாற்றங்களுக்கு ஆதரவாக, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஆண்டுக்கு ரூ. 12 லட்சம் நிதி உதவி வழங்கப்படும். மேலும், மாவட்ட அளவில் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கூடுதலாக ஆண்டுக்கு ரூ. 1 லட்சம் நிதி ஒதுக்கப்படுகிறது.

கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் இந்த ஒருங்கிணைந்த திட்டமிடல், ஜவுளித் துறையை ஒரு பெரிய தொழில்துறையாக மாற்றும் என்று மத்திய ஜவுளி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# 'நீதி பரவட்டும்' தடைகளை கடந்து திரைக்கு வந்த சிவகார்த்திகேயனின் பராசக்தி

தமிழகத்தில் பொங்கல் சிறப்பு திரைப்படங்களாக ஜனநாயகன் மற்றும் பராசக்தி ஆகிய திரைப்படங்கள்வெளியாகத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், தணிக்கை சான்றிதழ் பிரச்சினை காரணமாக ஜனநாயகன் படத்தின் வெளியீட்டு தேதி தள்ளிவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தமிழகம் முழுவதும் இன்று (ஜனவரி 10) திட்டமிட்டபடி பராசக்தி திரைப்படம் வெளியாகியுள்ளது.




நடிகர் சிவகார்த்திகேயனின்25வதுபடமாகவும், ஜி.வி. பிரகாஷின் 100வது படமாகவும் அமைந்துள்ள பராசக்தி திரைப்படம், சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன், ரவி மோகன், அதர்வா ஆகியோர் நடிப்பில் உருவாகியுள்ளது.

இந்தப் படம் ஜனவரி 10ஆம் தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், சென்சார் சான்றிதழ் வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தால், திரைப்படம் திட்டமிட்டபடி வெளியாகுமா என்ற பரபரப்பு எழுந்தது. இந்நிலையில், நேற்று (ஜனவரி 9) சென்சார் வாரியம் U/A சான்றிதழ் வழங்கியதால், திரைப்படம் இன்று(ஜனவரி10)தமிழகம் உள்ளிட்ட பல இடங்களில் வெளியாகியுள்ளது.

கேரளாவில் காலை 6 மணிக்கேதிரையிடப்பட்டது. தமிழக-கேரள எல்லையில் உள்ள சிவகார்த்திகேயன் ரசிகர்கள் கேரளாவுக்குச் சென்று படத்தைப் பார்த்து மகிழ்ந்தனர். 1965இல் தமிழகத்தில் நடந்த மொழிப்போர் வரலாற்றைத் தழுவிஎடுக்கப்பட்ட இந்தத் திரைப்படத்தில், சென்சார் பரிந்துரையின்படி சுமார் 25-க்கும் மேற்பட்ட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதில், பல இடங்களில் வசனங்கள் மியூட் செய்யப்பட்டுள்ளன; சில வார்த்தைகள் மாற்றப்பட்டுள்ளன. குறிப்பாக, "தீ பரவட்டும்" என்ற வார்த்தை "நீதி பரவட்டும்" என மாற்றப் பட்டுள்ளது. அதேபோல், "யார் ஆட்சி செய்தாலும் அண்ணாதுரைதான் ஆள்கிறான்" என்று பொருள்படும் 22 வினாடி வசனம் நீக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, படத்திற்கு U/A சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. நேற்று வரை வெளியீட்டில் குழப்பம் நிலவிய நிலையில், இன்று பராசக்தி படம் சுமார் 700 திரையரங்குகளில் வெளியாகியுள்ளது. தமிழகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் இன்று காலை 9மணிக்கு படம் திரையிடப்பட்டுள்ளது சிவகார்த்திகேயன் ரசிகர்கள் மத்தியில் படம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜனநாயகன் திரைப்படம் வெளியாகும் தேதி தள்ளி வைக்கப் பட்டுள்ளதால் பராசக்திக்கு 400 முதல் 450 திரையரங்கங்கள் மட்டுமே இருந்த சூழலில் தற்பொழுது சுமார் 700 திரையரங்கங்களில் வெளியாகி உள்ளது.

## டிக்கெட் இல்லாமல் பயணிக்க கூடிய இந்தியாவின் ஒரே ரயில்!

இந்தியாவில் பயணிகளின் பயண தேவைகளை தீர்த்து வைப்பதில் ரயில்துறை முக்கிய பங்காற்று கிறது. குறைந்த கட்டணம், பாதுகாப்பான பயணம், அதிவேக சேவைகள் போன்ற காரணங்களால் சாமானிய மக்களிடமும் ரயில் பயணம் பெரும் வரவேற்பைப்பெற்றுள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் டிக்கெட் எடுக்காமல் பயணிக்கக் கூடிய ஒரே ரயில் எது என்ற ஆர்வத்துக்கு பதிலாக, 'பக்ராநங்கல்' ரயில் குறிப்பிடத்தக்கது. பல ஆண்டுகளாக பயணி களுக்குகட்டணமில்லாமல் சேவை வழங்கி வரும் இவ்விசேட ரயில், பஞ்சாப் மற்றும் இமாச்சலப் பிரதே சத்துக்குஇடையே75ஆண்டு களுக்கும் மேலாக தொடர்ந்து இயக்கப் படுகிறது.

பழமையானபயணிகள் ரயிலான இது மலைப் பகுதிகள், நதிக்கரைகள், வனப்பகுதிகள் மற்றும் குறுகிய சுரங்கங்கள் வழியாக நிதானமாகச் செல்கிறது. தினசரி இயக்கப்படும் இந்த ரயில், சட்லஜ் நதியைத் தாண்டி, சிவாலிக் மலைத்தொடரின் அருகே பயணிக்கிறது. மேலும் மூன்று சுரங்கப் பாதைகள் வழியாகவும், ஆறு சிறிய ரயில் நிலையங்களில் நின்றும் சேவை அளிக்கிறது.

பக்ராநங்கல் ரயிலின் எரிபொருள் செலவுகள், பராமரிப்பு செலவுகள் உள்ளபோதும்,பயணிகளிட மிருந்து எந்தவித கட்டணமோ அபராதமோ வசூலிக்கப்படுவதில்லை என்பது சிறப்பம்சம். இதனுடன், இந்த ரயில் இந்திய ரயில்வேயால் அல்லாமல், ஒரு முக்கிய உள்கட்டமைப்புத் திட்டத்துடன் இணைந்த அரசு அதிகார அமைப்பால் இயக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# மறைந்த முதல்வர் ஜெயலலிதாவுடன் மோதல்: ரஜினிகாந்துக்கு உதவிய நடிகர் பாக்யராஜ்



தமிழ் திரையுலகில் நடிகர் மற்றும் இயக்குநர் பாக்யராஜின் 50வது ஆண்டு விழா சென்னை கலைவாணர் அரங்கத்தில் கொண்டாடப்பட்டது. ஜனவரி 7ம் தேதி அவரின் பிறந்த நாள் என்பதால் அரங்கத்தில் கேக் வெட்டப் பட்டது. முதல்வர் ஸ்டாலின், ரஜினி, கமல், டி,ராஜேந்தர் உள்ளிட்ட பல நடிகர்கள், இயக்குநர்கள் விழாவில் பங்கேற்றனர். விழாவில் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் கலந்து கொண்டு பாக்கியராஜ் பற்றி பல்வேறு விஷயங்களை பகிர்ந்து கொண்டது ஹைலைட்டாக அமைந்தது.

விழாவில் ரஜினிகாந்த் பேசியதாவது, ''இந்த விழாவை நடத்த பூர்ணிமா எடுத்த முயற்சிக்கு நன்றி. கடந்த 1970களில் மூன்று ராஜாக்கள் தமிழ் திரையுலகுக்கு வந்தனர். மூன்று பேரும் ஒவ்வொரு துறையில் அரசர்கள். அவங்களோட கொடி இப்போதும் பறந்து கொண்டிருக்கிறது. ஒருவர் இளையராஜா. இன்னொருவர் பாரதிராஜா மற்றொருவர் இந்தபாக்யராஜா.இதில்,இளையராஜா இசையோடு நின்றுவிட்டார். பாரதிராஜா கதை மற்றும் இயக்கத்தில் ஈடுபடுவார். ஆனால், பாக்யராஜ் அப்படியில்லை. கதை, நடிப்பு , திரைக்கதை, இயக்கம், வசனம் அவ்வளவு ஏன் இசையும் அமைப்பார். சாதாரண கதையைக் கூட தனது திரைக்கதையால் படத்தை நிற்க வைத்துவிடுவார்.

திரைக்கதைதான் சினிமாவுக்கு முதுகெலும்பு. அந்த முதுகெலும்புதான் பாக்யராஜ். இந்தியாவிலேயே திரைக்கதை





என்றால்சலீம்ஜாவீத்பெயர்தான் நினைவுக்கு வரும். அவருக்கு இணையாகஒருதிரைக்கதையை அமைப்பவர்தான் பாக்யராஜ். ஹீரோயினுக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்படும் கதையில் கூட, ஹீரோயிசம் கொண்டு வந்துவிடுவார் பாக்யராஜ். அவரின், ஒவ்வொரு படத்தைப் பற்றிப் பேசினால், எவ்வளவோ பேசலாம்.ஆனால், அவருக்கு உழைப்புக்கு இணையானஊதியமும்,புகழும்கிடைக்கவில்லை. இதே, பாக்யராஜ் ஹிந்தியில் இருந்திருந்தால் சலீம் ஜாவித்துக்கு இணையாக பேசப்பட்டிருப்பார். பாக்யராஜை தோளில் தூக்கிக் கொண்டாடியிருப்பார்கள். ஒரு மைனஸ் பாயிண்ட் என்னவென்றால்... பல படைப்பாளிகள் கதை , கதை என்றுஓடிவிட்டுநிஜவாழ்க்கையை மறந்துவிடுவார்கள். கேரக்டர்ஸ் பத்தியே நினைத்துக்கொண்டு, சொந்த வாழ்க்கையை மறந்து விடுவார்கள். அதனால், பேரு, புகழ் வந்தாலும், பணம் சம்பாதிப்பது அவர்கள் சிந்தனையில் இருக்காது.

பாக்யராஜுக்குக் கிடைத்த பெரிய பிளஸ் பாயிண்ட் பூர்ணிமாதான்.நான் தங்கமகன் படத்தில்தான் முதன்முதலில் பூர்ணிமாவோட நடிச்சேன். அவங்க, பாம்பேல பிறந்து வளர்ந்தபொண்ணு. இங்கிலீஸ், இந்திலதான் பேசுவாங்க. இவங்க, எப்படி பாக்யராஜை கல்யாணம் பண்ணுவாங்கனு நினைசேன். நம்ம ஆளோட இங்கிலீஸ் பற்றி சொல்ல வேண்டியதில்லை.

இந்தி ரொம்பவே சுத்தம். ஆனால், பாக்யராஜை ஒரு இயக்குநராகவோ, நடிகராகவே ஷூட்டிங் ஸ்பாட்டில் பார்த்தால் , ஆம்பளைங்களுக்கே அவர் மீது காதல் வந்துவிடும். அப்படிதான், பூர்ணிமா அவரை லவ் பண்ணிருப்பாங்கனு நினைக்கிறேன்.

மறக்க முடியாத நிகழ்வு

இன்னோரு முக்கியமான நிகழ்வு. அது, என் வாழ்க்கையில் மறக்க முடியாதது. இந்த விழாவில் நான் பங்கேற்க முக்கியக் காரணம் அதுதான். அந்த சம்பவத்தை இந்த நிகழ்ச்சியில் சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். 1995ம் ஆண்டு , நடிகர் சிவாஜி கணேசனுக்கு செவாலியர் விருது கொடுத்தாங்க. இதற்காக, திரையுலகம் மற்றும் அரசு சார்பாக விழா எடுத்தாங்க. சேப்பாக்கம் மைதானத்தில் மிகப்பெரிய விழா நடத்துனாங்க. அப்போதைய, சி.எம். ஜெயலலிதாதான் தலைமை விருந்தினர். இந்தநிகழ்ச்சியில் ஜெயலலிதாவை பற்றி நான் ஆவேசமாகப் பேசி விட்டேன். எப்போதுமே, கோபத்துக்கு ஆயுசு கம்மி. ஆனால், கோபமாக இருக்கும் போது பேசும் வார்த்தைகளுக்கு ஆயுசு அதிகம். நான், பேசியது ஜெயலலிதாவை ரொம்ப பாதிச்சுட்டுது. நான் அதை பற்றி யோசிக்காமல் பேசிட்டேன். நான் பேசி முடிச்சுட்டு, இருக்கைக்கு போறேன். என்னோட அருகில் இருந்த ஸ்ரீதேவி, 'இப்படியா பேசுவாங்க' என்று கடிந்து கொண்டார். சிவாஜி உள்ளிட்ட பலருக்கு முகம் இருண்டு போச்சு.

விழா முடிந்ததும், ஓபன் ஜீப்ல ஊர்வலமாக போற பிளான் இருந்தது. இந்த சமயத்துல, நடிகர் விஜயகுமார் என்னிடம்,'நீங்க வேண்டாம்.... எல்லாரும் கோபமாக இருக்குறாங்க ' என்று சொன்னாரு. ஆனாலும், நானும் அந்த ஊர்வலத்துல போனேன். இந்த சமயத்தில், பலரும் என்னை ஒரு மாதிரி நடத்துனாங்க. சிலர் என்னை கிள்ளினர். என்னை ஒரு மாதிரி தள்ளிட்டு போயிட்டுருக்காங்க.

இந்த சமயத்தில், இதை பார்த்துட்டு என்னை நோக்கி கத்திட்டு ஓடி வந்தார் பாக்யராஜ். அந்த இடத்துல ஒரு இன்ஸ்பெக்டர் ஜீப்போட நின்றுட்டுஇருந்தாரு. அவர்கிட்ட ஓடி போன பாக்யராஜ்,' என்ன சார் ஒரு ஆர்டிஸ்ட்டை இப்படி தள்ளிட்டு போயிட்டுருக்காங்க, பார்த்துட்டு இருக்கீங்கனு ' ஆவேசமானார். 'உடனடியா, இவரை பிக்கப் பண்ணி வீட்டுல கொண்டு போய் விடுங்க... இல்லைனா நாளைக்கு மீடியால நான் பேச வேண்டியது வரும்' அப்படினு எச்சரித்தார். பின்னர், என்னிடத்தில், 'சார் பூர்ணிமா இங்கதான் இருக்காங்க. இல்லனா, நானே உங்களோட வந்துடுவேன். நீங்க வீட்டுக்கு போனதும் எனக்கு போன் பண்ணுங்க 'என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

இந்த உதவியை என்னால் மறக்கவே முடியாது. அப்படி, ஒரு அருமையான நல்ல மனிதர். அவர், நல்ல ஆயுளுடன் நீண்ட காலம் வாழ வேண்டும்.''

இவ்வாறு அவர் பேசினார்.

# அதிமுகவிற்கு வாக்களித்தால் நல்லாட்சி மலரும்

## மற்ற கட்சிகளுக்கு வாக்களிப்பது செல்லாத வாக்குக்கு சமம் - எஸ்.பி.வேலுமணி





THE KOVAI HERALD

கோவை இதய தெய்வம் மாளிகையில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தலைமையில் கோவை புறநகர் தெற்கு, புறநகர் வடக்கு மற்றும் மாநகர் மாவட்ட அதிமுக சார்பில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர்கள் ஏ.கே.செல்வராஜ் செ.தாமோதரன் செ.ம.வேலுசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் பி.ஆர்.ஜி.அருண்குமார், அம்மன் கே.அர்ச்சுணன், வி பி.கந்தசாமி, கே ஆர்.ஜெயராம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் கோவையில் மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யு.ஆர்.கிருஷ்ணனுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் எஸ்பி. வேலுமணி பேசியதாவது, “வரும் சட்டமன்ற தேர்தலில் அதிமுக தலைமையில் ஆட்சி அமைவது உறுதி. அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடியார் முன்னிலையில் பாமக அதிமுக கூட்டணியில் இணைந்தது. திமுக எப்போதும்ஒருமுறைவெற்றிபெற்றால் அடுத்த தேர்தலில் மிகப்பெரிய தோல்வியை சந்திக்கும், அதேபோல் அதிமுக ஒருமுறை தோற்றால் அதன் பிறகு மாபெறும் வெற்றி பெறும். இது சரித்திரம்.

கோவை மாவட்டம் அதிமுகவின் கோட்டை என்று கவனகுறைவாக இருந்துவிடக்கூடாது. திமுகவினர் கடைசிநேரத்தில் ஏதாவது பொய்யை சொல்லி மக்களை சந்திப்பார்கள். நாம் களத்தில் கவனமுடன் இருந்து பொதுமக்களை நேரில் சந்திக்கவேண்டும். குறிப்பாக மகளிர் அணியினர் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று மக்களை சந்தித்து நமது ஆட்சியின் திட்டங்களை எடுத்துக்கூற வேண்டும். திமுக எதுவும் செய்யவில்லை, எனவே நாம் செய்த திட்டங்கள் மக்களுக்கு நன்றாக தெரியும். இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இளைஞர்கள் நம்முடன்தான் இருக்கின்றார்கள். யாரையும் நாம் குறைத்து மதிப்பிடாமல், களத்தில் கவனமுடன் செயல்பட வேண்டும். இந்த தேர்தல் நமக்கு முக்கியமான தேர்தல் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடியாரை முதல்வராக அமர்த்தவேண்டும். அதிமுக பொதுச்செயலாளர் மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் எழுச்சி பயணத்தை கோவை மேட்டுப்பாளையம் தெகுதியில் துவங்கினார். இப்போது, தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

திமுக ஆட்சிப் பொறுப் பேற்றதிலிருந்து தமிழக மக்களுக்காக எந்த ஒரு மக்கள் நலத்திட்டங்களையும் தரவில்லை. ஆகவே திமுகவிற்கு வாக்களிக்க தமிழக மக்கள் தயாராக இல்லை.

அதிமுக எனும் மாபெரும் கட்சி தன் நமக்கு பல்வேறு பதவிகளை தந்துள்ளது. எடப்பாடியார் மீண்டும் முதல்வராக பதவி ஏற்பது உறுதி. ஆகவே அதிமுகவின் வெற்றிக்காக அனைவரும் ஒருங்கிணைந்து சிறப்பாக பணியாற்றுங்கள். அதைத்தொடர்ந்து வருகின்ற உள்ளாட்சித்தேர்தல், கூட்டுறவுசங்க தேர்தல்களில் உங்களுக்கு பல்வேறு வாய்ப்புகள் கிடைக்கும்.

அதிமுக நிர்வாகிகள், பூத் பொறுப்பாளர்கள், வார்டு அதிமுக பொருப்பாளர்கள், அனைவரையும் அரவணைத்து செல்லவேண்டும். வரைவு வாக்காளர் பட்டியலை ஒவ்வொருவரும் கையில் வைத்திருக்கவேண்டும். விடுபட்ட வாக்காளர்களை கண்டறிந்து அவர்களை மீண்டும் வாக்காளர் படியலில் இடம்பெற செய்யவேண்டும்.

தேர்தல் கணக்கீட்டு பணியில் இன்னும் கூடுதலாக பணியாற்ற வேண்டும். நமக்கு வாக்களிக்க மக்கள் தயாராக இருக்கிறார்கள்.

கூட்டணியை பொதுச் செயலாளர் பார்த்துக்கொள்வார். நம்முடைய பணியை சிறப்பாக மேற்கொண்டாலே போதும். மீண்டும் அதிமுக ஆட்சி அமைவது உறுதி. நிர்வாகிகள் அனைவரும் வீடுவீடாகச் சென்று திண்ணைப் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டும். அதிமுக ஆட்சி காலத்தில் எடப்பாடியார் முதல்வராக இருந்தபோது நிறைவேற்றப்பட்ட திட்டங்களை எடுத்துக்கூற வேண்டும். திமுக ஆட்சியால் மக்கள் படும் அவலங்களை எடுத்துக் கூறுங்கள். அதிமுகவில் இளைஞர்கள் ஏராளமானோர் உள்ளனர். ஒரு சில கட்சிகள் மாயத் தோற்றத்தை உருவாக்க நினைக்கிறது ஆகவே அந்த மாயை நம்பி ஏமாறாதீர்.

புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட வேண்டும். அன்னதானம் வழங்குதல், நலத்திட்ட உதவி வழங்குதல், சுவர் விளம்பரம் எழுதுதல், விளையாட்டுப் போட்டிகள் என சிறப்பாக கொண்டாட வேண்டுகிறேன். அதிமுகவில் உள்ளோர் தலைமை அதிமுக அறிவிப்புகளை சமூக வலைத்தளங்களில் பகிர வேண்டும். நான்கரை ஆண்டு காலம் பல்வேறு திட்டங்களை தந்து சிறப்பாக ஆட்சி நடத்திய எடப்பாடியாரின் புகழை பரப்ப வேண்டும். எடப்பாடியார் மீண்டும் முதல்வராக வரவேண்டும் என தமிழக மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதிமுகவிற்கு வாக்குகள் விழுந்தால் தமிழகத்தில் நல்லாட்சி கிடைக்கும். மற்ற கட்சிகளுக்கு விழும் வாக்குகள் செல்லாத வாக்குகள் ஆகும். அவர்களால் தமிழ்நாட்டிற்கு எந்த பயனும் இல்லை. “என்று அவர் பேசினார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒகே.சின்ராஜ், எட்டிமடை ஏ.சண்முகம், கஸ்தூரிவாசு, ஏ.எஸ்.மகேஷ்வரி, பிரேமா, மாவட்ட அவைத் தலைவர் ஏ.வெங்கடாசலம்,

அதிமுக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் தோப்பு க.அசோகன், அதிமுக மாணவர் அணி செயலாளர் சிங்கை ஜி.ராமச்சந்திரன், தகவல் தொழில்நுட்ப பிரிவு மண்டல செயலாளர்

விக்னேஷ்சுப்பையன், சார்பு அணி மாநில, மண்டல மாவட்ட நிர்வாகிகள் சிடிசி ஜப்பார், இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளர் பப்பாயா ராஜேஷ், மாவட்ட மகளிரணி செயலாளர் குணசுந்தரி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பொங்கல் விழா





தி கோவை ஹெரால்டு

கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மாணவர் நல மையம் சார்பில் பாரம்பரிய பொங்கல் விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. கல்லூரியின் செயலரும், இயக்குநருமான சி.ஏ. வாசுகி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர்கள் பாரம்பரிய உடையணிந்து உற்சாகமாக பங்கேற்றனர்.

நிகழ்வில் கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் செண்பகலெட்சுமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். திஇந்து குழுமத்தின் பொதுமேலாளர் ராஜ்குமார் துரைராஜ் கௌரவ விருந்தினராக பங்கேற்றார்.

கல்லூரி முதல்வர் சங்கீதா, துணை முதல்வர் நாகராஜா சுயநிதிப் பிரிவு ஒருங்கிணைப் பாளர் சுமங்கலா, மாணவர் பேரவைத் தலைவர் தோம்னிக் லித்வினா உள்ளிட்டோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் கல்லூரியின் தலைமையில் ‘தேடி வந்த வரமே, நாடி வந்த காதலே’ என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. மாணவர்களின் கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.



Thamarai International School
THAMARAI INTERNATIONAL SCHOOL
Towards Excellence
A Residential & Day Boarding CBSE School
THANJAVUR
Aff.No.1930251
Thamarai Nagar,Karunthattankudi (PO),
Thanjavur - Kumbakonam Bypass Road, Thanjavur - 613002
KUMBAKONAM
Aff.No.1930774
Ts No. 156/4 A, Asoor Main Road,
Kadichambadi, Kumbakonam - 612501
PATTUKKOTTAI
Aff.No.1931772
88/2A, East Coast Road,
Thambikkottai, Pattukkottai (Tk),
Thanjavur Dist.,- 614704
REGISTRATIONS OPEN (2026 - 27)
FOR PRE-KG TO IX & GRADE XI
A Perfect Destination for Quality Education
Our performance so far...
MBBS-795
IITs-33
BDS-124
NITs-57
NIFTEM-14
IIITs-23
BITS-6
TIS TIS



The best education & the best infrastructure at a nominal fee in the entire Delta region..
Excellent Scholastic inputs embedded with student centric activities
www.thamaraischools.org
A one stop solution for all your educational needs
A school with a proven track record in the field of competitive exams like IIT JEE, NEET, CUET, IISER, NISER, CLAT etc.,
Holistic development which fabricates “Global Citizens” with Indian values
Foundation courses for IIT JEE,NEET & MAT for Grades 6 - 10
Hostel Facility Available @ Thanjavur & Kumbakonam
info@thamaraischools.org | infokum@thamaraischools.org | infopkt@thamaraischools.org
THANJAVUR : 04362 - 253360 / 62 / 64, 7806812920 / 22
KUMBAKONAM : 0435 - 3500300 / 301 8012597427 / 28 / 29
PATTUKKOTTAI : 6383355050 6369966801

# இந்தியாவில் ஓட போகிறது முதல் ஹைட்ரஜன் ரயில்

## நீலகிரி மலை ரயிலும் மாறுகிறது

சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத 'பசுமைப் போக்குவரத்து' நோக்கிய இந்தியாவின் பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக, நாட்டின் முதல் ஹைட்ரஜன் எரிபொருள் ரயில் ஹரியானாவில் இயக்கப்படத் தயாராக உள்ளது.




இந்த ரயில் ஹரியானாவின் ஜிந்த் சோனிபட் இடையே சுமார் 90 கிலோமீட்டர் தூரத்திற்குத் தனது முதல் சோதனை ஓட்டத்தைத் தொடங்கவுள்ளது. இதற்கான அதிகாரப்பூர்வ சோதனை ஓட்டம் ஜனவரி 26, முதல் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ரயில் சென்னையின் ஐசிஎஃப்தொழிற்சாலையில் 'ஆத்மநிர்பர் பாரத்' திட்டத்தின்கீழ் முழுமையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மணிக்கு 110 முதல் 140 கி.மீ வேகத்தில் செல்லும் திறன் கொண்டது. இதன் அதிகபட்ச வேகம் மணிக்கு 150 கி.மீ வரை இருக்கும்.

இதில் 8 பயணிகள் பெட்டிகள் மற்றும் இரு முனைகளிலும் தலா ஒரு ஓட்டுநர் சக்தி பெட்டிகள் என மொத்தம் 10 பெட்டிகள் உள்ளன.

டீசல் இன்ஜின்களுக்கு மாற்றாக ஹைட்ரஜன் எரிபொருள் செல்களைப் பயன்படுத்துவதால், இது புகைக்குப் பதிலாக நீராவி மற்றும் தண்ணீரை மட்டுமே வெளியேற்றும்.

டீசல் ரயில்களை விட இது மிகக் குறைந்த சத்தத்துடன் இயங்கும், இதனால் பயணிகளுக்கு அமைதியான மற்றும் சொகுசான பயணம் கிடைக்கும். ஒரே நேரத்தில் சுமார் 2,600-க்கும் மேற்பட்ட பயணிகள் இதில் பயணிக்க முடியும்.

இந்த ரயிலுக்குத் தேவையான எரிபொருளை வழங்க, ஹரியானாவின் ஜிந்த் பகுதியில் இந்தியாவின் மிகப்பெரிய பச்சை ஹைட்ரஜன் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. 3,000 கிலோ சேமிப்பு திறன் கொண்ட இந்த ஆலை, தண்ணீரில் இருந்து ஹைட்ரஜனைப் பிரித்தெடுக்க நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.

இந்திய ரயில்வே, முதற்கட்டமாக 35 ஹைட்ரஜன் ரயில்களை இயக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. நீலகிரி மலை மற்றும் கல்கா-சிம்லா போன்ற மலைப்பாதைகளிலும் இந்த ரயில்களை அறிமுகப்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

இந்த புதிய தொழில்நுட்பத்தின் மூலம், இந்தியா சர்வதேச அளவில் ஜெர்மனி மற்றும் சீனா போன்ற நாடுகளின் வரிசையில் இணைய உள்ளது.




## பெங்களூரு-கொல்லம் பொங்கல் சிறப்பு ரயில்

### போத்தனூர் வழியாக இயக்கம்

பொங்கல் பண்டிகையையொட்டி, கர்நாடக மாநிலம் பெங்களூருவில் இருந்து கேரள மாநிலம் கொல்லம் நோக்கி சிறப்பு ரயில் சேவை அறிவிக்கப்பட்டுள்ளது.

சேலம் ரயில்வே கோட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள தகவலின்படி, ஜனவரி 13-ஆம் தேதி இரவு 11 மணிக்கு பெங்களூரிலிருந்து புறப்படும் பெங்களூரு கொல்லம் சிறப்பு ரயில் (எண்: 06219), மறுநாள் மாலை 4 மணிக்கு கொல்லம் நிலையத்தை சென்றடையும்.

மறுமார்க்கமாக, ஜனவரி 14-ஆம் தேதி மாலை 6.30 மணிக்கு கொல்லத்தில் இருந்து புறப்படும் கொல்லம் பெங்களூரு சிறப்பு ரயில் (எண்: 06220), மறுநாள் காலை 10.30 மணிக்கு பெங்களூரு சென்றடையும்.

இந்த ரயில் காயன்குளம், மாவேலிக்கரை, செங்கனூர், திருவல்லா, சங்கணாச்சேரி, கோட்டயம், எர்ணாகுளம் டவுன், ஆலுவா, திருச்சூர், பாலக்காடு, போத்தனூர், திருப்பூர், ஈரோடு, சேலம், பங்காருப்பேட்டை, கிருஷ்ணராஜபுரம் உள்ளிட்ட நிலையங்களில் நின்று செல்லும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

## சிங்கப்பூர்-மலேசியா ரயிலில் செல்ல 2.8 லட்சம் கட்டணம்... பின்னணி என்ன?

ஒரு ரயில் பயணம் 5 நட்சத்திர ஓட்டலை விடப் பிரம்மாண்டமாக இருந்தால் எப்படி இருக்கும்? சிங்கப்பூரில் இருந்து மலேசியாவுக்குச் செல்லும் 'ஈஸ்டர்ன் & ஓரியண்டல் எக்ஸ்பிரஸ்' ரயிலைப் பார்த்தால், "இது ரயிலா அல்லது தண்டவாளத்தில் ஓடும் அரண்மனையா?" என்றே கருத தோன்றும். பெல்மண்ட் நிறுவனம் இயக்கும் இந்த ரயில், ஆசியாவின் மிகச்சிறந்த சொகுசு ரயில்களில் ஒன்று.



சாதாரண பெர்த்கள் கிடையாது. ஒவ்வொரு பயணியும் தங்குவதற்குத் தனித்தனியாகச் சொகுசு அறைகள் உள்ளன. உள்ளேயே குளியலறை, ஏசி வசதி, சோபா, கட்டில் என அனைத்தும் இருக்கும். சுவர்கள் செர்ரி மரத்தால் அலங்கரிக்கப்பட்டு, பட்டுத் துணிகளால் ஜொலிக்கும். ரயிலில் உள்ளே இரண்டு ரெஸ்டாரன்ட் பெட்டிகள் உள்ளன. உலகத்தரம் வாய்ந்த சமையல்காரர்கள் உள்ளேயே சமைத்து, பெரிநாகன் வகை உணவுகள் மற்றும் மேற்கத்திய உணவுகளைப் பரிமாறுவார்கள். மாலையில் நேரத்தைப் போக்க 'பியானோ பார்' உள்ளது. மது அருந்திக் கொண்டே இசையை ரசிக்கலாம். ரயிலின் பின்பகுதியில் திறந்த வெளிப் பெட்டி உள்ளது.

காற்று வாங்கிக் கொண்டே மலேசியாவின் காடுகளை ரசிக்கலாம். இந்த ரயில் சிங்கப்பூரின் உட்லண்ட்ஸ் நிலையத்திலிருந்து புறப்படுகிறது. மலேசியாவின் அடர்ந்த காடுகள் ரப்பர் தோட்டங்கள் மற்றும் நெல் வயல்கள் வழியாகச் சென்று, பினாங்கிலுள்ள லங்காவியை அடைகிறது. இது ஒரு "மெதுவான பயணம்" அதாவது, அவசரமாக ஊர் போய் சேர்வதற்கு அல்ல; பயணத்தையே ரசிப்பதற்காக உருவாக்கப் பட்டது.

4 நாட்கள் மற்றும் 3 இரவுகள் கொண்ட இந்தப் பயணத்திற்கு, ஒருவருக்கான கட்டணம் சுமார் 3,410 அமெரிக்க டாலர்களில் இருந்து தொடங்குகிறது.

அதாசது, இந்திய மதிப்பில் இது சுமார் ரூ.2.8 லட்சம் ஆகும். இந்த விலையைக் கேட்டால் சாமானியர்களுக்குத் தலைசுற்றலாம்.

ஆனால், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மற்றும் தேனிலவு செல்லும் பணக்கார ஜோடிகளுக்கு இது ஒரு கனவுப் பயணம்.

"காசு பணற துட்டு முக்கியமில்லை ... அனுபவம்தான் முக்கியம்" என்று நினைப்பவர்கள், சிங்கப்பூர் சென்றால் இந்த 'நடமாடும் அரண்மனையில்' ஒரு ரவுண்டு போயிட்டு வாங்க.




## 14 நாட்கள் சர்க்கரையை தவிர்த்து பாருங்கள்... உடலில் ஏற்படும் அபார மாற்றம்

இரண்டு வாரங்களுக்கு சர்க்கரையை தவிர்ப்பதால் உடலில் பல மாற்றங்கள் ஏற்படும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

நமது அன்றாட வாழ்க்கையில் சர்க்கரை எடுத்துக்கொள்ளாமல் ஒரு நாளும் முடிவதில்லை. காலையில் எழுந்த உடன் சர்க்கரை கலந்த தேநீரையே முதலில் பருகிறோம், இதுதவிர நாம் சாப்பிடும் உணவுகள், ஸ்நாக்ஸ்களில் சர்க்கரை கலந்திருக்கும். இதனால் கலோரிகள் அதிகரித்து உடல் எடை கூடுவதோடு, உடல்நல பிரச்சனைகளையும் சந்திக்கக்கூடும். ஆகவே, முதலில் சர்க்கரையை தவிர்ப்போம். அதற்கு முன்பாக முதல் 14 நாட்கள் சர்க்கரையை தவிர்ப்பதன் மூலம் உடலில் ஏற்படும் மாற்றங்கள் என்னென்ன என்று மருத்துவர்கள் குறிப்பிடுவதை பார்ப்போம்.




சர்க்கரை அதிகமாக எடுத்துக்கொள்வது உடல் பருமன், டைப் 2 நீரிழிவு நோய், கொழுப்பு கல்லீரல் மற்றும் இதய பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும் என்பதற்கு பெரிய அளவிலான ஆராய்ச்சி முடிவுகள் உள்ளன. ஆகவே, சர்க்கரையை குறைப்பது வெறும் கலோரிகள் குறைப்பு என்பதோடு நின்றுவிடாது, உடல் ஆற்றல், பசி எடுப்பதில் மாற்றத்தை நிகழ்த்தும். இரண்டு வாரங்கள் சர்க்கரையை தவிர்ப்பது என்பது கலோரிகளை குறைத்து உண்பதை விட அதிக நன்மையை கொடுக்கும். அது மெட்டபாலிசத்தை மீட்டமைத்து, உங்கள் ஹார்மோன்கள் இயக்கத்தை சமநிலைப்படுத்தவும் உதவுகிறது. குறிப்பாக உணவு செரிமானத்திலும் நாம் முக்கிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

சர்க்கரையை தவிர்க்க முதல் மூன்று நாட்கள் சற்று கடினமானதாக இருக்கலாம். இனிப்பு சாப்பிடுவதற்கான ஏக்கம் அதிகரிக்கும், தலைவலி, மயக்க உணர்வு ஏற்படலாம். எரிச்சல், மனநிலையில் மாற்றம், சோர்வாக உணருவீர்கள், கவனம் செலுத்துவதில் தடுமாற்றம் இருக்கும். இது ஆபத்தானதுஇல்லை, நமது மூளை சர்க்கரை இல்லை என்றால் அதனை எவ்வாறு நிர்வகிப்பது என்பது குறித்து தேட முயற்சிக்கிறது.. அவ்வளவுதான். உங்கள் இயக்க ஆற்றல் நிலையாகிறது, இனிமேல் உடலில் சர்க்கரை ஏற்ற இறக்கங்கள் இருக்காது, உங்கள் இரத்தத்தில் சர்க்கரை அதிகரிப்பதை நிறுத்தும்போது, பசி தானாகவே குறையத் தொடங்குகிறது. செரிமானப் பிரச்னைகள் குறைகிறது, பிற்பகலில் ஏற்படும் சோர்வான உணர்வில் இருந்து விடுபடுவீர்கள்.8

14 நாட்களில்தான் சர்க்கரையை நிறுத்தியதால் ஏற்படும் உண்மையான மாற்றங்கள் தெரியவரும். உங்கள் வயிறு தட்டையாகத் தெரியத் தொடங்கும், ரத்தத்தில் சர்க்கரை அளவு சீராக இருக்கத் தொடங்கும், நீங்கள் எப்போது பசியாக இருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும், மன அழுத்தம் குறைந்து இரவில் தூக்கமும் நன்றாக வரத் தொடங்கும்.

உங்களுக்கு இன்சுலின் அளவு குறைவாக இருக்கும், இது இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்த உதவுகிறது. உங்கள் கல்லீரல் ரிலாக்ஸாக இயங்கும், அதிகப்படியான சர்க்கரையை நிர்வகிக்க வேண்டிய அவசியமில்லை என்பதால், அது கொழுப்பைச் சேமிக்கும் வாய்ப்பு குறையும். உங்கள் சுவை மொட்டுகள் மீட்டெடுக்கப் படுவதால், இனிப்பு உணவுகள் அவ்வளவு கவர்ச்சிகரமாகத் தெரியாது.

சர்க்கரையை கைவிட்ட பிறகு ஆரோக்கியமான உணவுகளில் கவனம் செலுத்துவது அதிகரிப்பதாக மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். சர்க்கரை உங்கள் ஆரோக்கியத்தில் எவ்வளவு பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்பதை கணிக்க இரண்டு வாரங்கள் போதுமானது.




Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami. (Note: All the litigations aur within the jurisdiction of Coimbatore courts only.)